பொது சன நூலகம்
யாழ்ப்பாணம்



# வலம்புரி
VALAMPURI

விலை ரூபா 5-00

சங்கு 1 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 24 சனிக்கிழமை (06 - 05 - 2000) VALAMPURI ஒலி: 139

## யாழ்.குடாநாட்டு யுத்த அழிவுகள் ரஷ்யாவுக்கு கவலை அளிக்கிறது

### ரஷ்ய வெளியுறவு அமைச்சு அறிக்கை

வட இலங்கையின் யாழ்.குடா நாட்டில் தற்போது இடம்பெற்று வரும் யுத்த நிலைமைகள் குறித்து தான் கவலையடைந்திருப்பதாக ரஷ்யவெளியுறவு அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. இலங்கையில் நீண்டகாலமாக இடம் பெற்று வரும் போரினால் இலங்கையின் பாதுகாப்பும் பிரதேசஇறைமையும் அச்சுறுத்தலுக் குள்ளாகிறது. இப் போர் நிலைமைகள் ஒட்டு மொத்தமாக தென் ஆசியாவில் ஸ்திரமற்ற நிலையை ஏற்படுத்தும் என்றும் இப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு (8ஆம் பக்கம் பார்க்க)

## கோண்டாவில் ஆலடிச்சுடலையில் சாக்கில் இளம்பெண்ணின் சடலம்

### மர்மக் கொலையால் மக்கள் மத்தியில் பீதி

[யாழ்ப்பாணம்]

கோண்டாவில் கிழக்கில் பாற்பண்ணை வீதியிலுள்ள கட்டை ஆலடி மயானத்திற் கருகாமையில் இனம் தெரியாத இளம் பெண் ஒருவரின் சடலம் சாக்கினுள் கட்டப்பட்ட நிலையில் நேற்றுக்காலை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தலை வெளியே தெரியக் கூடியவாறு மூட்டையாக் கட்டப்பட்ட இச் சடலத்தின் ''நாக்கு'' வெளியேறிய நிலையில் இருந்ததுடன் திரவப் பொருள் ஒன்று முகத்தில் ஊற்றப்பட்டதினால் முகம் கருகிப்போய் அடையாளம்காண முடியாதவறு (8ஆம் பக்கம் பார்க்க)

# ★ புலிகளுக்கு எதிரான யுத்தத்தில்- நட்பு நாடுகள் உதவி அரசுக்குகிடைக்கும்?

### அரசியல் ஆய்வாளர் கேள்வி

(கொழும்பு)

**இலங்கையில் தற்போது நிலவும் யுத்த சூழ்நிலையின் காரணமாக இலங்கைக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவிகள் செய்வதற்கு இந்தியா, பாகிஸ்தான், இஸ்ரேல் ஆகியன சம்மதம் தெரிவித்துள்ளன.**

**இந்த உதவிகள் எத்தகையனவாக இருக்கும் என்பது தொடர்பாக எந்தவொரு நாடும் திட்டவட்டமாக அறிவிக்கவில்லை.**

ஆனையிறவிலும், பளைப் பகுதியிலும் இராணுவத்தினருக்கு ஏற்பட்ட பின்னடைவை ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கா ஏற்றுக்கொண்ட போதிலும் புலிகளுடனான யுத்தத்தை தொடரப்போவதாகத் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் அண்டை நாடுகளிடம் குறிப்பாக இந்தியா, பாகிஸ்தான், இஸ் (2 ஆம் பக்கம் பார்க்க)

## இஸ்ரேலுடன் உறவை புதுப்பித்தமைக்கு முஸ்லிம் காங்கிரஸ் பலத்த எதிர்ப்பு

[கொழும்பு]

நாட்டில் ஏற்பட்டுள்ள யுத்த நிலைமைகளை அடுத்து அரசாங்கம் இஸ்ரேலுடன் மீண்டும் இராஜ தந்திர உறவுகளைப் புதுப்பித்திருக்கும் முடிவுக்கு எதிராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் போர்க்கொடி தூக்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

அரசின் இம்முடிவை ( 8ஆம் பக்கம் பார்க்க)

## அம்பன் பகுதியில் பதற்றம் பாடசாலை மூடப்பட்டு மக்கள்வெளியேற்றம்

**வடமராட்சி கிழக்கில் இடம் பெற்றுவரும் ஷெல் தாக்குதல்கள், துப்பாக்கி வேட்டுக்களினால் அச்சமடைந்த அம்பன் பகுதி மக்கள் படிப்படியாக இடம் பெயர்ந்து பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றவண்ணமுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பதற்றத்தினாலும், பீதியினாலும் அம்பன்** (8ஆம் பக்கம் பார்க்க)

## புதிய அரசியலமைப்புத் திருத்தம் குறித்து அரசு ஐ.தே.கட்சி நேற்று பேச்சு

*(கொழும்பு)*

*புதிய அரசியலமைப்புச் சீர் திருத்தம்தொடர்பாக அரசும் ஐக்கிய தேசியக் கட்சியும் நேற்று பேச்சு நடத்தியுள்ளன.*

*அலரிமாளிகையில் காலை 10 மணியளவில் இடம்பெற்ற இப் பேச்சின் போது 1997 இல் சமர்ப்பிக்கப்பட்ட உத்தேச அரசியல்சட்டவரைபின் 9ஆம் அத்தியாயத்தில் அடங்கும் விடயங்களில் உடன்பாடு காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.*

*பௌத்த மதம், மொழி,* [8 ஆம் பக்கம் பார்க்க]

## கதிர்காமர் நாடு திரும்பினார்

(கொழும்பு)

சிகிச்சை பெறுவதற்காக இந்தியா சென்றிருந்த இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொழும்பு திரும்பியுள்ளார்.

இவர் கிசிச்சை முடித்ததும் இந்தியப் பிரதமர் வாஜ்பாய் வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங்கையும் சந்தித்து பேச்சு நடத்திய பின்பே நாடு திரும்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ-ச)

★ இலங்கையின் தற்போதய பிரச்சினையில்

## மத்திய அரசின் நடவடிக்கைகளில் அதன் கரத்தை கட்ட விரும்பவில்லை

### தமிழகமுதல்வர் மு கருணாநிதி புதுடில்லியில் அறிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள பிரச்சினையில் நாட்டின் நலன் கருதி மத்திய அரசு எடுக்கும் எந்தவொரு நடவடிக்கையிலும் அதன் கரங்களைக் கட்டுப்படுத்த தமிழக அரசு விரும்பவில்லை என்று தமிழக முதலமைச்சர் சலைஞர் மு. கருணாநிதி கூறியுள்ளார்.

மீண்டும் இந்திய அமைதி காக்கும் படையை இலங்கைக்கு அனுப்பும் பேச்சுக்கு இடமில்லை என்று மத்திய அரசு மு. கருணாநிதியிடம் உறுதி கூறியுள்ளது.

இலங்கைப் பிரச்சினையில் அதனோடு சம்மந்தப்பட்ட சகல விடயங்களும், இலங்கை (8 ஆம் பக்கம் பார்க்க)

## இளைஞர் கைது

(யாழ்ப்பாணம்)

இணுவில் கிழக்கைச் சேர்ந்த கோவிந்தன் புவீந்திரன் (வயது 19) நேற்றைய தினம் வீட்டில் வைத்து படையினரால் கைது செய்யப்பட்டதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்தில் முறையிடப்பட்டுள்ளது.

இவரது கைது தொடர்பான ரசீது படையினரால் உறவினர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. (ச-03)

## இலங்கைப்பிரச்சினை அணுகுமுறையில் கருணாநிதியின் அனுபவத்தை பயன்படுத்த மத்திய அரசு விரும்புகிறது

### ஜஸ்வந்சிங் தெரிவிப்பு

தமிழ்நாடு இலங்கைக்கு அருகில் இருப்பதாலும் இலங்கைப் பிரச்சினையால் தமிழ்நாடு அதிக கவலை அடைந்திருப்பதாலும் முதல்வர் கருணாநிதியின் முதிர்ந்த அனுபவத்தைப் பயன் படுத்திக்கொள்ள இந்திய மத்திய அரசு விரும்புவதாக இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் தெரிவித்துள்ளார்.

இதேவேளை யாழ்ப்பாணத்தில் (8ஆம் பக்கம் பார்க்க)

## நகர சபை உறுப்பினர் இராஜினாமா

(புலோலி)

வல்வெட்டித்துறைநகரசபை உறுப்பினர் ஒருவர் தனது உறுப்பினர் பதவியை ராஜினாமாச் செய்வதாக அறிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியைச் சேர்ந்த நகரசபை உறுப்பினர் பரமு தியாகராசா என்பவரே தனது ராஜினாமாச் செய்தவராவர்.

(வ-52)

## பயணச்சீட்டுபணம்மீளளிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்காக பயணச்சீட்டுப் பெற்றவர்களில் இதுவரை பயணச்சீட்டு பணத்தை மீளப்பெறாதவர்கள் அதற்கான கொடுப்பனவை அடுத்த திங்கட்கிழமை ( 8ஆம் பக்கம் பார்க்க)

**அரசின் யுத்த நிலைப் பிரகடனத்தை எதிர்த்து**

## ஐக்கியதேசியக்கட்சி கொழும்பில்ஆர்ப்பாட்டம்

*(கொழும்பு)*

*அரசினால் கொண்டுவரப்பட்டுள்ள பொதுப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தையும் நாட்டை யுத்த நிலையில் வைத்திருக்கும் அறிவிப்பையும் எதிர்த்து நேற்று ஐ.தே. கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியுள்ளனர்.*

*கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்ற இவ்வார்ப்பாட்டத்தில் பங்குபற்றிய 30 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றதை அடுத்து ஆர்ப்பாட்டமாக அன்றி அமைதியாக இந்நிகழ்வு இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.*

(8ஆம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணத்திலிருந்து

# யு.என்.எச்.சி.ஆர் பிரதிநிதிகள் படிப்படியாக வெளியேறுவர்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தற்போது நிலவி வருகின்ற அசாதாரண நிலைமையைக்கருத்தில்கொண்டு இங்குபணிபுரிந்து வருகின்ற ஐக்கிய நாடுகள் சபையின் அமைப்புக்களைச் சேர்ந்த அதிகாரிகள் கட்டம் கட்டமாக கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்பட்டு வருகின்றனர் எனத் தெரியவருகிறது.

இங்கு ஐ.நா அமைப்புகளினால் புனர்வாழ்வு மிதிவெடிகள் அகற்றல் மற்றும் நிவாரண உதவித் திட்டங்கள் போன்றவை செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இவற்றில் புனர்வாழ்வு மற்றும் மிதிவெடிகள் அகற்றும் திட்டங்களைச் சேர்ந்தவர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வாபஸ் பெறப்பட்டுவருகின்றனர்.

மிதிவெடிகள் அகற்றும்திட்டத்தில் பணியாற்றிய சிம்பாவே நாட்டு உத்தியோகத்தர்கள் அவர்களால் கொண்டுவரப்பட்ட மோப்பநாய்கள் சகிதம் கடந்த வாரம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பலில் திருகோணமலை சென்று அங்கிருந்து கொழும்பு சென்றடைந்துள்ளனர்.

மீதியாக இருப்பவர்கள் கட்டம் கட்டமாகச் சென்றுவிடுவார்கள் எனவும் தெரியவருகிறது. ஆயினும் நிவாரண உதவித் திட்டத்தில் பணிபுரிகின்ற உத்தியோகத்தர்கள் தொடர்ந்தும் யாழ்ப்பாணத்தில் இருந்து தமது பணிகளை மேற்கொள்வர் எனவும் கூறப்படுகிறது.

யாழ்ப்பாணத்திலுள்ள ஐ.நா.சபையின் அமைப்புகளில் மொத்தமாக 60 பேர் வரை பணி புரிவதாகவும். கொழும்புக்குத் திருப்பி அழைக்கப்படும் உத்தியோகத்தர்கள் தென்பகுதியில் மேற்படி அமைப்புகளால் அமுல் செய்யப்படும் திட்டங்களில் பணியாற்றுவார்கள் எனவும் தெரிய வந்துள்ளது.

இது இவ்வாறிருக்க யாழ்ப்பாணத்திலுள்ள சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களான அகில உலக கெயர் நிறுவனம் போரூட் சிறுவர் பாதுகாப்பு நிதியம் (ஐ.நா) பட்டினிக்குஎதிரான இயக்கம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் எம்.எஸ்.எவ். அமைப்பு போன்றவை இங்கு தொடர்ந்து தமது பணிகளை மேற்கொள்ளும் எனவும் தெரிய வருகின்றது.

(க-77)

## முகாம் பகுதியிலிருந்து மக்களை வெளியேற படையினர் பணிப்பு

[மட்டக்களப்பு]

அக்கரைப்பற்று சுண்டிக்குழி விசேட அதிரடிப் படையினரின் முகாமைச் சூழவுள்ள தமிழ் மக்களை அப்பகுதியிலிருந்து வெளியேறுமாறு அதிரடிப் படையினர் உத்தரவிட்டுள்ளனர்.

இப்பகுதியில் 79 தமிழ்க் குடும்பங்கள் நிரந்தரமாக வசித்து வருகின்றன.

இவ்வுத்தரவு இக்குடும்பங்கள் மத்தியில் பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## யாழ்ப்பாண தொலைபேசிசேவைசீர்குலைவு மக்கள் மத்தியில் பணப்புழக்கம் மந்தம்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்துக்கான தொலைபேசி இணைப்புகள் துண்டிக்கப்பட்டதைத் தொடர்ந்து வெளிநாடுகளில் இருந்து பக்ஸ் மூலம் வங்கிகளுக்கும் தனியாருக்கும் கிடைத்துவந்த உண்டியல் பணத்தின் வருகைதடையாகியுள்ளது.

இதன் காரணமாக வெளிநாடுகளில் இருக்கும் தமது பிள்ளைகள் மாதாந்தம் அனுப்பும் பணத்தில் வாழ்க்கையைக் கொண்டு சென்ற பல பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் பெரும் கஷ்டங்களை எதிர் நோக்கிவருகின்றனர்.

வெளிநாட்டு உண்டியல் பணம் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இவ்விதமானவர்களுக்கு உணவுப் பொருட்களைக் கடனுக்கு வழங்கி வந்தவர்கள் தற்போது கடனுக்குப் பொருட்களை வழங்குவதை தவிர்த்து வருவதாகவும் தெரியவருகின்றது.

(க-77)

## பயண அனுமதிப் பத்திரங்கள் தொ.த. குழுவின் அறிவுறுத்தல்

(கொழும்பு)

யாழ். குடாவிலிருந்து கப்பல் மூலமோ விமானம் மூலமோ கொழும்பு வருபவர்களுக்கென வழங்கப்படும் பயண அனுமதிப்பத்திரங்கள் காலாவதியானாலும் அவர்கள் பொலிஸ் நிலையங்களில் பதிய அனுமதிக்கப்பட வேண்டும் என தொல்லை தவிர்ப்புக் குழு சகல பொலிஸ் நிலையங்களுக்கும் அறிவித்தல் விடுத்துள்ளது.

யாழ் நகரிலிருந்து கொழும்பு வருபவர்களுக்கு 45 நாட்களுக்கான பிரயாண அனுமதி வழங்கப்படுகின்றது.

இந்த அனுமதிப் பத்திரங்களை பொலிஸ் நிலையங்களில் காண்பித்தாலேயே அனுமதி வழங்கபடுவது குறிப்பிடத்தக்கது. (சி-59)

## விளையாட்டு வினையாகியது மயிரிழையில் சிறுமி தப்பினார்

### அல்லைப் பிட்டியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

விளையாட்டாகக் கழுத்தில் சுருக்கிட்ட சிறுமி ஒருத்தி ஆபத்தான நிலையில் யாழ் போதனாவைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு இப்போது தேறிவருகிறார்.

ரவீந்திரன் இந்துஜா என்ற 12 வயதுடைய இச்சிறுமி பாடசாலை முடிந்து வீட்டிற்குச் சென்று மீண்டும் பாடசாலைக்கு சென்றாள்.

அங்கு மரத்தில் தடமிட்டுக் கட்டப்பட்டிருந்த கயிற்றில் விளையாட்டாகத் தலையை மாட்டினாள். அச்சமயம் கதிரை சறுக்கிவிழவே அந்தரத்தில் தொங்கினாள். இதனை அங்குவேலை செய்துகொண்டிருந்த மேசன் கண்டு அபயக் குரலிடவே அயலவர் கூடி உயிராபத்திலிருந்த இச்சிறுமியை மீட்டனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் அல்லைப் பிட்டியில் உள்ள பாடசாலை ஒன்றில் இடம் பெற்றது.

(சி-12)

## சங்குவேலியிலும் அகதிக்குடும்பங்கள் தொழில் வாய்ப்பின்றி அவதி

தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த கொடிகாமம், பளை, மிருசுவில் பகுதிகளை சேர்ந்த 20 ற்கும்மேற்பட்ட குடும்பங்கள் தமது பாவனைப் பொருட்கள் மற்றும் கால் நடைகளுடன் சங்குவேலிப் பகுதியில் தஞ்சம் அடைந்துள்ளார்கள்.

இவர்களது குடும்பங்கள் கூலிவேலை செய்யும் தொழிலாளர் குடும்பங்களாக இருப்பதாலும் அன்றாட உணவுக்குப் பெரிதும் கஷ்டப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## வீட்டார் உறங்கும் வேளையில் கள்வர் கனகச்சிதமாக கைவரிசை

[இணுவில்]

சுதுமலை எச்சாட்டி ஞான வைரவர் கோவிலுக்கு முன்பாக உள்ள கார்த்திகேசு என்பவரது வீட்டில் வீட்டார் நள்ளிரவு உறக்கத்தில் இருந்த வேளை மேல் ஓட்டை பிரித்து இறங்கிய திருடர்கள் பெறுமதியான தையல் இயந்திரம், ஒரு தொலைப்பெட்டி மற்றும் சில உபகரணங்களையும் திருடிச் சென்றுள்ளார்கள்.

வீட்டாருக்கு காலையில் எழுந்த பின்பே திருட்டு நடந்தது தெரியவந்ததாம்

(சி-49)

## சீவல் தொழிலாளரின் சிக்கனம் முட்டிக்குப் பதில் வெற்றுப் போத்தல்

(இணுவில்)

யாழ். குடாநாட்டில்பொதுவாக புன்னாலைக்கட்டுவன் ஈவினைப் பகுதியில் சீவல் தொழிலாளர்கள் தமது வறுமை நிலைமை காரணமாகவும் தற்போது முட்டிகளின் விலை அதிகரித்துள்ளதாலும் வெற்றுக்குளிர்பானப் போத்தல்களை முட்டிகளுக்குபதிலாக பாவிப்பதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

பொதுவாக எடுத்தகுளிர்பானபோத்தல் 5 ரூபாவுக்கு வாங்க கூடியதாக இருப்பதால் தமக்கு வீண் பணசெலவும் இல்லை எனவும் தொழிலாளர்கள் கூறுகின்றனர் அத்துடன் குளிர்பான போத்தல்கள் தாம் நீண்ட காலப்பயன்பாட்டிற்கு உகந்ததாகவும் காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றார்கள்

[சி]

## படை முகாமிலிருந்து வந்த சூடு மாணவி ஒருத்தி படுகாயம்

(கொழும்பு)

அனுராதபுரம் சாலியபுர படைமுகாம் ஒன்றில்இருந்து படத்தப்பட்ட துப்பாக்கிசூட்டுப் பிரயோகத்திற்கு அரை கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள வீட்டின் மாணவியொருவர் படுகாயமடைந்தார் அனுராதபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

இச்சம்பவம் அண்மையில் நடத்தப்பட்டது.

சாலியபுர படை முகாமில் பயிற்சியில் ஈடுபட்டிருந்த ஸ்ரீலங்கா படையைச் சேர்ந்த ஒருவரின் தவறுதலான துப்பாக்கி பிரயோகத்தால் இது நடந்ததாக சாலியபுர படை அதிகாரிகள்தெரிவித்தார்கள்.

(த-சி)

## பயண அனுமதி வழங்கப்பட்டோர் விபரம்

யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களிற்கு இம்மாதம் 05 ஆம் திகதி வரை பயணம் செய்ய அனுமதி வழங்கப்பட்டவர்களின் பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் ரீதியாகத் தரப்படுகின்றது.

யாழ்ப்பாணம்

| | | | |
|---|---|---|---|
| 142915 ஏ | 142980 ஏ | 142980 பி | 142980 சி |
| | | 142980 டி | 143019 ஏ |
| | | 143019 பி | 143019 சி |
| | | 143028 ஏ | 143028 பி |
| | | 143028 சி | 143029 ஏ |
| | | 143065 ஏ | 143065 பி |
| | | 143067 ஏ | 143067 பி |
| | | 143067 சி | 143067 டி |
| | | 143157 ஏ | 143174 ஏ |
| | | 143174 பி | |

(சு)


# அறிவித்தல்

## வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி

## வேலைகளுக்கான ஒப்பந்தகாரரை பதிவு செய்தல்-2000

வலி. கிழக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கேள்வி நடைமுறைகள் மூலம் வேலைகளைச் செய்ய விரும்பும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து. விண்ணப்பங்கள் என்னால் கோரப்படுகின்றன.

கீழ்க் குறிக்கப்பட்ட ஆவணங்களை அலுவலகத்தில் சமர்ப்பித்து மீள்ளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக ரூபா 100/- உம், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 10,000/- உம், செலுத்துவுதன் பேரில் இச்சபையின் வேலை ஒப்பந்தகாரராகத் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

1. ரூபா 500,000/- ற்கான சொத்துக்களின் சான்றிதழ்
2. வியாபார பதிவுச் சான்றிதழ்
3. ICTAD பதிவுச் சான்றிதழ்
4. பொருட்கள், சேவைகள் வரிப்பதிவுச் சான்றிதழ்
5. தொழில்நுட்ப தகுதிச் சான்றிதழ் (வீதி அபிவிருத்தி அதிகார சபை/வீதி அபிவிருத்தித் திணைக்களம் / மாநகர/நகர / பிரதேச சபைகள் /கட்டிடம்/நிர்மாணத் திணைக்களம்)
6. தொழில்நுட்பம், வாகனங்கள்' உபகரணங்களின் ஆளணி முதலியவற்றின் சான்றிதழ்

இச்சபையுடன் பதிவு செய்து கொள்ளும் ஒப்பந்தக்காரர்களுக்கு மட்டும் 2000ஆம் ஆண்டில் ஒப்பந்த வேலைகள் தொடர்பில் கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

பதிவுகள் யாவும் 24-05-2000ஆம் திகதி நண்பகல் 12-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பு. குணசிங்கம்
(ஜே. பி. யு. எம்)
தலைவர்,
வலி. கிழக்குப் பிரதேச சபை,
நீர்வேலி.

வலி. கிழக்குப் பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி,
03-05-2000

(கி/297)


## கல்வி உபகரணங்கள் அன்பளிப்பு

(அரியாலை)

அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயமாணவர்களுக்கு ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினால் கல்வி உபகரணங்கள் அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளதாக வித்தியாலய அதிபர் பொ. நடராஜா தெரிவித்துள்ளார்.

(செ-106)

## இடமாற்றம்

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு நாகர் கோவில் பகுதியில் இயங்கிவந்த நாகர்கோயில் உபதபால் அலுவலகம் தற்போது வடமராட்சி உபய கதிர்காமம் பகுதியில் இயங்கி வருகிறது. (சி-43)


N. C. A
கல்வி நிலையம்
பருத்தித்துறை
இரசாயனவியல்
வகுப்புகள்
ஆரம்பம்
திங்கள்மாலை 8-5-2000
2001-ORGANIC 3-00
2002-BASIC 4-00
ஆசிரியர்
திரு.வே.பரமேஸ்வரன்
(B. Sc)
(கி/298)

யாழ்ப்பாணம்

# விபத்து வருமுன் காப்போம் விபரீதம் விளையாது தவிர்க்க விழிப்பு தேவை

மேற்கத்திய நாடுகளில் பாதுகாப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து கைத்தொழில் பாதுகாப்பு வாரம் கொண்டாடப்படுகிறது. அதே போல் வடமாகாணத்திலும் மே-1ஆம் திகதி முதல் 7ஆம் திகதி வரை கைத்தொழில் பாதுகாப்பு வாரம் கொண்டாடப்படுவதனையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

(ஆ-ர்)

அபாயம் எத்தன்மையானாலும் போக்க உபாயமில்லாததில்லை.

விபத்து என்பது எந்நேரமும் எவ்விடத்திலும் நிகழக்கூடிய விரும்பத்தகாத ஒரு சம்பவமாகும். அதாவது விபத்துக்கள் வேலைத்தலத்திலோ, வீட்டிலோ அல்லது பிரயாணம் செய்யும் பொழுதோ சம்பவிக்கலாம். விபத்துக்கள் நிகழுமிடத்தைக் கொண்டு அதற்குரிய பாதுகாப்பு முறையினை இரு வகைகளாகப் பிரிக்கலாம். அவையாவன.

(1) வேலை செய்யும் இடக்கு பாதுகாப்பு (On The Job Safety)

(2) வேலையற்ற இடத்து பாதுகாப்பு (Off The Job Safety)

## வேலை செய்யுமிடத்து பாதுகாப்பு

உரிய பாதுகாப்பற்ற நடவடிக்கை (Safety)யும் பாதுகாப்பற்ற நிலை (Un Safe Condition) உம் விபத்து ஏற்படுவதற்குரிய காரணிகளாகும். மேற்குறிப்பிட்ட இரு காரணிகளும் நீக்கப்படுமானால் விபத்து ஏற்படுவதை தடுக்கலாம். இயந்திரங்களினைப் பாவிக்கும் வேலைத் தலங்களில் ஏற்படும் விபத்து ஏனையவற்றிலும் பாரதூரமானவை. எனவே அத்தகைய விபத்துக்களைத் தடுப்பதற்கு அரசாங்கம்தொழிற் திணைக்களத்திலுள்ள தொழிற்சார் பாதுகாப்பு பிரிவ OccuPedi onal Sefeay Divlion மூலம் தொழிற்சாலைகளில் ஏற்படும் விபத்துகளைத் தடுப்பதற்குத் தொழிற்சாலைகளில் தொழிற்சங்கக் சட்டளைச் சட்டத்தை அமுல்படுத்துவதுடன் தொழிலளிக்கும் ஏனையோருக்கும் உரிய ஆலோசனைகளை வழங்குகின்றது.

## வேலையற்ற நேரத்தில் பாதுகாப்பு

இதனை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்.

1) வீட்டில் பாதுகாப்பு
2) வீதிப் பாதுகாப்பு

## வீட்டில் பாதுகாப்பு

வீட்டில் அபாயம் கூடிய பகுதி சமையலறையாகும். இங்கு காய்கறிகள் போன்றவற்றினை வெட்டுவதற்குப் பாதுகாப்பற்ற கூரிய கத்தி பாவிப்பதும், சூடான பொருட்கள், காரமான பொருட்கள் கையாளப்படுவதும் எரிபொருள், மின்சக்தியினால் இயங்கும் சாதனங்கள் பாவிப்பதும் நீரினைச் சமையலுக்காகக் கையாள்வதும் விபத்து ஏற்படுவதற்குக் காரணிகளாகும்.

காய்கறிகள் போன்றவற்றினை வெட்டுவதற்கு கூரிய கத்திகளினைப் பாவிக்கும் பொழுது கைவிரலில் காயம் ஏற்பட. சாத்தியமுண்டு. இவற்றினை வெட்டும் பொழுது சுகந்த பலகை (Chopping boerd) பாவிப்பது அனுபவ ரீதியாகவும் விரலில் உண்டாகும் வெட்டுக் காயங்களினைத் தவிர்த்துக் கொள்ளலாம். மேலும் சூடான பொருள்களைக் கையாளும் பொழுது அரிதில் வெப்பம் கடத்திகளான போதுமான அளவு கடதாசி, துணி போன்றவற்றினைப் பாவித்தல் வேண்டும். தீ வெப்பத்தினால் காயம் ஏற்படும் வேளைகளில் சுண்ணாம்பு கலந்த தேங்காய் நெய்யினையோ அல்லது தேங்காய் நெய்யினையோ உடனடியாக பூசுவதால் தீக்காயத்தின் பாரதூரமான விளைவுகளை பெருமளவில் குறைக்க முடியும்.

குப்பி விளக்கினை அல்லது அரிக்கன் லாம்பினை ஒரு சிலர் படுத்திருந்து வாசிப்பதற்குப் பயன்படுத்துகின்றார்கள். இவ்வாறு வாசிக்கும் சமயங்களில் அவர்கள் தங்களையறியாமல் நித்திரைக்குள்ளாகின்றனர். இதனால் மரண விபத்து மற்றும் எரிகாயங்கள் போன்ற விபரீத விளைவுகள் ஏற்படுகின்றது.

மேலும் படுத்துப் படிப்பதால் கண்பார்வை பாதிப்படையவும் வாய்ப்புண்டு. எனவே இவ்வழக்கத்தினைக் கைவிடுவதே சாலச் சிறந்ததாகும்.

மண்டபத்தில் (Hall) இலத்திரன் உபகரணங்களே பாவிக்கப்படுகின்றது. இவை பிளாஸ்ரிக போன்றவற்றினால் மேலுறை இடப்பட்டுள்ளதால்பாதுகாப்பானது. ஆனால் அவற்றிற்கு மின் வழங்கும் வயர்கள் நடமாடும் பகுதியில் இல்லாமல் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

## வீதி விபத்து

வீதியில் விபத்து ஏற்படுவதற்குரிய காரணிகள் கீழே காட்டப்பட்டுள்ளன.

1) போக்குவரத்து விதியை அனுசரியாமை

2) சீரற்ற வீதி

3) குறைபாடுள்ள வாகனம்

போக்குவரத்து விதிகளை முறையாக அனுசரித்தால் பெரும்பாலான வீதி விபத்துக்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.

ஒரு நபர் விபத்துக்குள்ளானால் அவரின் உழைப்பிற்கு பாதிப்பு ஏற்படுவதுடன் மேலதிகமாக வைத்தியச் செலவு, குடும்ப அங்கத்தவருக்கு கஷ்டம், காயத்தினால் வேதனை போன்றவற்றை அனுபவிக்க வேண்டும் எனவே Prevention Is Be ter Than cure என்ற பழமொழியின் முக்கியத்துவத்தை உணர்ந்து ஏற்படக்கூடிய விபத்துக்களைத் தவிர்ப்போமேமக்களிடையே விபத்துக்களை தடுப்பதற்கு விழிப்புணர்வினை ஏற்படுத்த Ce lon Society of Prevention of Accitents நம் நாட்டில் உண்டு. அதன் செயற்பாடு இங்கு குறைவாக உள்ளதால் தங்களின் நன்மை கருதி நான் மேற்குறிப்பிட்ட விளக்கங்களாக தந்துள்ளேன்.

**எஸ். மகேந்திரராஜா**
(யாழ் மாவட்ட தொழிற்சாலை பரிசோதகப் பொறியியலாளர்)

# ஏழாலை துப்பாக்கி சூட்டுச் சம்பவம் மற்றொருசடலம் அடையாளம் காணப்பட்டது

ஏழாலைப் பகுதியில் அண்மையில் சுட்டுக் கொல்லப்பட்ட நான்கு பேரின் சடலங்களில் மற்றுமொரு சடலம் இனம் காணப்பட்டுள்ளது.

செல்லக்கண்டு சக்திவேல் என்பவருடைய சடலம் இனம் காணப்பட்டுள்ளது.

மற்றொரு சடலம் ஏற்கனவே இனம் காணப்பட்டது மற்றையசடலத்திற்கு எவரும் உரிமை கோராததையடுத்து அதனை அரச செலவில் அடக்கம் செய்யுமாறு மல்லாகம் மாவட்ட நீதிபதி பணிப்புரை விடுத்துள்ளார்.

(க-12)

# உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கத்தால் எரிபொருள் நிலையம் அமைக்க முயற்சி

கரவெட்டி பிரதேச செயலகப் பிரிவு உடுப்பிட்டி பல நோ. கூ. சங்கத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று திறக்கப்படவுள்ளது.

இதற்கான நடவடிக்கைகளை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொண்டுள்ளது.

கடந்த வியாழன் யாழ். கச்சேரியில் நடைபெற்ற எரிபொருள் விநியோகம் சம்பந்தமான கலந்துரையாடலின் போது கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். ஸ்ரீனிவாசன் விடுத்த கோரிக்கையையடுத்தே இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(க-52)

# கெல்ற்வகுப்பு பகிடிவதை 'நோய்' தென்மராட்சிக்கும் பரவுகிறதாம்!

(மந்துவில்)

யாழ். பல்கலைக்கழக புகுமுக தென்மராட்சி பகுதி மாணவருக்கான ஆங்கில கெல்ற் வகுப்புக்கள் சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் இடம் பெற்று வருகின்றது.

இந்த புதிய மாணவர்கள் கெல்ற் வகுப்பு முடிந்து வீடுகளுக்கு செல்லும் போது சிரேஷ்ட மாணவர்களால் பகிடிவதைகளுக்கு உட்படும் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

புதிய மாணவர் வெளியில் வந்தவுடன் அவர்களை நிறுத்தி அச்சுறுத்துவதுடன் பணிய மறுக்கும் மாணவர்களை அவர்கள் துரத்திச் சென்று அச்சுறுத்துவதாக அறியவருகின்றது.

வலிகாமத்தில் இவ்வாறான பகிடிவதைச் சம்பவங்கள் நிகழ்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

(39-சி)

துரையப்பா விளையாட்டு அரங்கில்

# இன்று பிற்பகல் நிகழவுள்ள இரு உதைபந்தாட்டப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

யாழ். உதைபந்தாட்டலீக் நடத்தும் 22 வயதுக்கு உட்பட்டோருக்கான உதைபந்தாட்டப் போட்டிகள் இன்று சனிக்கிழமை பிற்பகல் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளன.

முதல் போட்டியில் கொக்குவில் பொற்பதி விளையாட்டுக்கழகம் நாவாந்துறை கலைவாணி விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன இப்போட்டி பிற்பகல் 3. 30 மணிக்கு ஆரம்பமாகும்.

இரண்டாவது போட்டியில் நாவாந்துறை நீக்கிலஸ் விளையாட்டுக் கழகமும் பாஷையூர் சென் அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் மோதுகின்றன.

இப்போட்டி பிற்பகல் 4 30 மணிக்கு ஆரம்பமாகும். (சி)

## சுற்றுப் போட்டி

(அரியாலை)

நல்லூர் வடக்கு விநாயகர் விளையாட்டுக் கழகமும், யாழ். விளையாட்டுக் கழகங்களும் இணைந்து நடத்தும் 7 பேர் கொண்ட 12பந்துப் பரிமாற்றங்களுடைய மாபெரும் மிலேனிய மென் பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டிக்கு விண்ணப்பிப்பதற்கான முடிவுத்திகதி எதிர்வரும் 8ஆம் திகதி எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி-106)

## தொழிற் பயிற்சிக் கற்கை நெறிகள்

(அரியாலை)

உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் கல்லூரி பழைய மாணவர்சங்க நுண்கலை மன்றத்தினரால், பாடசாலையை விட்டு வெளியேறிய மாணவர்களுக்கான தொழிற் பயிற்சிக் கற்கை நெறிகள் இன்று சனிக்கிழமை ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சிநெறிக்கு ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்க முடியும்.

மேற்படி மன்றத்தினரால் நடனம், சங்கீதம், மிருதங்கம் மற்றும் ஆங்கில வகுப்புக்கள் நடத்தப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

(செ-106)

# யாழ். பொதுநூலகப்பணிகள் இடைநிறுத்தம் சம்பளப்பணம் வந்துசேர வில்லை

யாழ்ப்பாணப் பொது நூலகப் புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. புனரமைப்புப் பணியினைப் பொறுப்பேற்ற கொழும்பிலுள்ள லங்கா கெட்நிறுவனத்திடம் இருந்து 17 நாட்களுக்குரிய சம்பளம் இன்னும் வராததினால் தற்காலிகமாக இப்பணி நிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலைமைக்குத் தொலைத் தொடர்புகள் அற்றிருப்பதே முக்கிய காரணமாக உள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

(க-12)

# ஆசிரிய கலாசாலைக் கிணற்றிலிருந்து இரு ஷெல்கள் மீட்கப்பட்டன

(மந்துவில்)

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் உள்ள நன்னீர்க் கிணறு ஒன்றில் இருந்து 2 ஷெல்கள் கண்டுபிடிக்கப்பட்ட சம்பவம் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது.

மேற்குறிப்பிட்ட சம்பவம் பற்றி தெரியவருவதாவது வியாழக்கிழமை கிணற்றினை இறைத்துத் துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டவர்களால் இச்ஷெல்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இது பற்றி படையினருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் அதனை அகற்றும் பணியில் ஈடுபட்டனர்.

(சி-39)

# மாபெரும் மரதன் ஓட்டப்போட்டி

சங்கானை ஞானவைரவர் விளையாட்டுக் கழகத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை மாபெரும மரதன் ஓட்டப் போடி நடத்தப்பட்டவுள்ளது காலை 7.00 மணிக்கு ஆலய முன்றலில் ஆரம்பமாகி சங்கானை ஊடாக சண்டிலிப்பாய், தொட்டிலடி, பண்டத்தரிப்பு. சித்தன்கேணி ஊடாக சென்று மீண்டும் சங்கானை ஊடாக ஆலய முன்றலை வந்தடையும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(செ-26)

# நாட்டின் இறைமை, ஐக்கியம் காக்க மக்களின்பூரணஒத்துழைப்பு தேவை

## அமைச்சர் ரத்வத்தை கோருகிறார்

(கொழும்பு)

''நாட்டுமக்களைப்போர்க் களத்திற்குச் செல்லுமாறு நாம் வற்புறுத்தவில்லை. நாட்டின் இறைமையையும் ஐக்கியத்தையும் காப்பதற்காக நாட்டு மக்கள் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்குமாறே நாம் பொது மக்களைக் கோருகிறோம்.''

இவ்வாறு பிரதிப்பாதுகாப்பு அமைச்சரும் மின் சக்தி, எரிபொருள் அமைச்சருமான ஜெனரல் அனுருத்த ரத்வத்தை நேற்றுத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பாதுகாப்புப் படையினர் நலன்காக்கும் வகையிலான நிதிக்கும் பெருமளவில் பல்வேறு திணைக்களங்கள், அமைப்புகளிடமிருந்து பணம் சேர்ந்தவண்ணமுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

அமைச்சர்கள் தமது ஒரு மாதச் சம்பளத்தை இந்த வகையில் அன்பளிப்புச் செய்ய முன்வந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

(சி)

ஈரானிலிருந்து

# விடுதலையான 480 ஈராக்கைதிகள் உறவினரை இனங்காணதுடித்தனர்

(பாக்தாத்)

1980 முதல் 88 ஆம் ஆண்டு வரை நடைபெற்ற போரின் போது தடுத்து வைக்கப்பட்ட 480 ஈராக்கிய போர் கைதிகளை 12 வருடங்களின் பின்னர் ஈரான் விடுதலை செய்துள்ளது.

விடுதலை செய்யப்பட்ட ஈராக்கிய போர்க் கைதிகள் சோர்வுடன் முப்துரியா எல்லையைக் கடந்தபோது அவர்களுக்கு உணர்ச்சிபூர்வ வரவேற்பு அளிக்கப்பட்டது.

எல்லையில் காத்திருந்த உறவினர்கள் கண்ணீருக்கு மத்தியில் விடுதலை செய்யப்பட்ட கைதிகளை ஆரத்தழுவி முத்தமிட்டனர்.

நேற்று விடுதலை செய்யப்பட்ட 480 போர்க் கைதிகளுடன் கடந்த ஒரு மாதத்தில் 2479 போர்க் கைதிகளை ஈரான் விடுதலை செய்தது.

ஈரானினால் 18 வருடங்களாகத் தடுத்து வைக்கப்பட்டிருந்த இவர்கள் உறவினர்களால் அடையாளம் காண்பதில் சிரமத்துக்குள்ளான பரிதாப நிலை காணப்பட்டது.

அதே வேளை வளர்ச்சியடைந்த தமது பிள்ளைகளை ஈராக்கியர்கள் இனம்காணுவதில் தடுமாற்றம் அடைந்தனரென்று தெரிவிக்கப்படுகிறது (து)

## சிங்கப்பூர்-ஜப்பான் வர்த்தகத்தில் புதிய உத்தி முறைகள் அறிமுகம்

(சிங்கப்பூர்)

சிங்கப்பூருக்கும், ஜப்பானுக்கும் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் புதிய உத்திகளுடன் பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது.

அதனை சிங்கப்பூர் வர்த்தகத் தொழில் அமைச்சரும்ஜப்பானிய வர்த்தகத்தொழில் அமைச்சரும் சந்திப்பின் போது ஏற்றுக் கொண்டனர்.

பொருள்களின் தரம்பற்றி ஒருஆய்வு நடத்தி இருதரப்பினரும பரஸ்பரம இணக்கம் காணவும் அந்தப்புதிய நடவடிக்கை வகை செய்கிறது.

இன்னும் இரண்டு மாதங்களில் இதுதொடர்பான பேச்சு வார்த்தைகள் ஆரம்பமாகின்றன. வரும் நவம்பர்மாதத்தில் அந்த அறிக்கை இருமந்திரிகளின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படும் என்று தெரிய வருகிறது. (து)

## இலங்கை அணியின் வெற்றிக்கு இலஞ்சம் கொடுத்தேனா? கபில்தேவ்

(புதுடில்லி)

1994 ஆம் ஆண்டு இலங்கையில் நடைபெற்ற ஒரு நாள் கிறிக்கெட் பந்தையத்தில் மனோ பிரபாகர் தனது திறமைக்கு குறைவாக விளையாட 25 இலட்சம் ரூபா கபில்தேவ் வாங்கித் தருவதாகக் கூறியிருந்தார் என்ற இந்தக் குற்றச் சாட்டை கபில்தேவ் மறுத்திருக்கிறார்.

தனக்கு எதிராக முன்னாள் கிறிக்கெட் போட் தலைவர் இந்திர சித்சிங் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் தனக்கு எதிராகப் பேட்டி கொடுத்ததிற்கு எதிர்த்து தான் ஒரு வழக்குத் தொடர்வதற்கு சட்ட வல்லுநரை ஆலோசித்து வருவதாகக் குறிப்பிட்டார்.

இதேவேளை இந்திய வீரர்களிடம் எவ்வித குற்றங்களும் காணப்படவில்லை யென்று கிறிக்கெட் சபையின் அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (து)

## இந்திய-இஸ்ரேல் வர்த்தகத்திற்கு இணைவுப்பாலமான பொருட்காட்சி

(டெல் அவிவ்)

இஸ்ரேலில் முதல் முறையாக இந்திய வர்த்தகம் பொருட்காட்சி தொடங்கியுள்ளது.

நூற்றுக்கும் அதிகமான இந்திய நிறுவனங்கள் பங்கு கொள்ளும் இப்பொருட்காட்சியை இஸ்ரேல் துணைப் பிரதம மந்திரியும் தகவல் தொடர்புத்துறை அமைச்சருமான வென்சமன் எலிசர் தொடக்கிவைத்தார்.

எலிசர் உரையாற்றுகையில் பல்வேறு துறைகளில்இந்தியா கண்டுள்ள வளர்ச்சி இப் பொருட்காட்சியில் தெரிகிறது என்றும் இந்திய இஸ்ரேல் நாடுகளுக்கிடையேயான உறவுகளை வலுப்படுத்துவதில் இப்பொருட்காட்சி முக்கியபங்கு வகிக்கிறதென்றும் தெரிவித்தார்.

இந்திய இஸ்ரேல் வர்த்தகம் மிகப்பெரிய அளவில் விஸ்தரிக்கப்பட்டிருப்பதாகவும் பல்வேறு துறைகளில் குறிப்பாக மென்வயர் தொழில்களில் இருதரப்பு ஒத்துழைப்புக்குஅதிகவாய்ப்பு வளம் இருப்பதாகவும் இக்காட்சியில் கலந்து கொண்ட இந்திய மத்தி வாணிபத் தொழில் துறை இணை அமைச்சர் ராமன்சிங் கூறினார். (து)

நாகை மீனவர் கொலை விவகாரம்

# இந்தியா இலங்கையிடம் கடும் விசனம் தெரிவித்துள்ளது என்கிறார் கலைஞர்

(சென்னை)

கடந்த 29 ஆம் திகதி நாகபட்டினத்தில் கோடிக்கரை கடற்பகுதியில் மூன்று மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக இந்திய வெளியுறவு அமைச்சுக்குத்தான் எழுதிய கடிதத்திற்கு கடந்த புதன்கிழமை பதில்கிடைத்திருப்பதாகவும் இச்சம்பவம் தொடர்பாக புதுடில்லியில் உள்ள இலங்கைத் தூதுவரிடம் இந்திய கடும் விசனத்தைத் தெரிவித்திருப்பதுடன் கொழும்பிலுள்ள அதிகாரிகளுக்கு தெரிவித்துள்ளதாகவும் தமிழக முதலமைச்சர் கலைஞர். மு. கருணாநிதி தெரிவித்துள்ளார்.

இதேவேளை தமிழகசட்டசபையில் பல சட்டசபை உறுப்பினர்கள் மீனவர்கள் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக கடும் ஆட்சேபனையை வெளிப்படுத்தினர்.

கடந்த பத்து ஆண்டுகளில் இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து இடம் பெற்று வருவதாக அவர்கள் சாடினர்.

## குஜராத்வரட்சிக்கு உதவுங்கள்

(புதுடில்லி)

குஜராத் மாநில முதலமைச்சர் கேசவாய் பட்டேல் நேற்று மத்திய தலைவர்களைச் சந்தித்து மாநிலத்தில் வரட்சியைப் போக்குவதற்கான திட்டங்களுககு விரைவான ஆமோதிப்பை நாடினார்.

அவர் மத்திய நீர்வளத்துறை அமைச்சர் டாக்டர் தக்கூரைச் சந்தித்து சௌரஸ்டாவில் உலக வங்கித் திட்டத்தை விரைவு படுத்துமாறு கேட்டுக் கொண்டார்.

உவர்நீராவதைத் தடுப்பதற்கான அத் திட்டத்திற்கு 1100கோடி ரூபா செலவாகும் என்று சொல்லப்படுகிறது. (து)

### செய்திப்பரல்

★ தெற்கு லெபனானில் நடந்த மோதல் ஒன்றில் 2 பொதுமக்களும் 2 கெரில்லாக்களும் கொல்லப்பட்டனர்.

★ இந்தோனேசியா மத்தியில் ஏற்பட்ட பூகம்பத்தில் 16 பேர் உயிரிழந்தனர் என்று சொல்லப்படுகிறது.

★ நைஜீரியாவில் 19 பஸ் பயணிகள் தீவிரவாதிகளால் கொல்லப்பட்டனர்.

★ கிறிக்கெட் வீரர்கள் தொடர்ந்து இலஞ்ச ஊழலில் ஈடுபட்டார்களானால் அவர்களுக்கு ஆயுள் தண்டனைதான் கிடைக்கும் என கிறிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை அறிவித்துள்ளது.

★ ஈரானில் இன்று இரண்டாம் கட்டப் பாராளுமன்றத் தேர்தல் நடைபெறுகிறது. (து-த)

# மொழிப் பிரச்சினையை வைத்து கமரூணை பிளவுபடுத்தாதீர்

## கோபி அனான்

[டோலா]

மொழிப் பிரச்சினையால் கமரூண் நாடு பிளவுபடக் கூடாது என்று கமரூண் பற்றிக் கூறுகையில் ஐ. நா. பொதுச் செயலர் கோபி அனான் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கமரூண் நாட்டில் பல மொழி பேசுபவர்கள் வாழ்கிறார்களென்றும் பல இனத்தவர்கள் இங்கு வாழ்கிறார்களென்றும் மொழிப் பிரச்சனையை ஒரு சாட்டாக வைத்து மக்களிடையே பிரச்சினைகள் வளர்வது சரியில்லையென்றும் கோபி அனான் தெரிவித்தார்.

மேலும் அவர் குறிப்பிடுகையில் எல்லா மொழிகளுக்கும் கமரூண் நாட்டில் சம வாய்ப்பு கொடுத்தால் எவ்வித பிரச்சினைகளும் தோன்றாது என்றும் தெரிவித்தார். (து)

# ஐ. நா. மனித உரிமைக் குழுவில் இலங்கை போன்ற நாடுகள்தவிர்ப்பு

## சில நாடுகள் அதிருப்தி

(ஜெனீவா)

ஐக்கிய நாடுகள் அமைப்பு 24 நாடுகளைக் கொண்ட மனித உரிமை ஆணைக் குழு தெரிவு.

நேற்றுத் தெரிவு செய்யப்பட்ட இந்த ஆணைக் குழு 2001 ஆண்டு ஜனவரி முதல் மூன்று ஆண்டுகள் செயற்படுமென அறிவிக்கப்படுகிறது.

இதில் ஆசியாசார்பில் சவூதி அரேபியா, சிரியா, மலேசியா இந்தோனேசியா, இந்தியா, தாய்லாந்து மற்றும் வியட்நாம் ஆசியநாடுகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

எனினும் நேபாளம் இலங்கை ஆகிய நாடுகளும் உரிமை பெற இருந்தபோதும் இந்த நாடுகளுக்கு உறுப்புரிமை வழங்கப்படவில்லையென்றும் சொல்லப்படுகிறது.

இந்தத் தெரிவுகள் குறித்து சில நாடுகள் தமது அதிருப்தியைத் தெரிவித்துள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன. (து)

## ஜப்பானிய பிரதமர் குசிறோமோர் அமெரிக்க அதிபரைச் சந்திப்பார்

(ரோக்கியோ)

ஜப்பானியப் பிரதமர் குசிறோ மோரின் அமெரிக்க அதிபர் கிளின்டனைச் சந்திக்கும் முகமாக அரசமுறைப் பயணம் ஒன்றைமேற் கொண்டிருக்கிறார்.

வாஷிங்டன் சென்றிருக்கும் மோரின் வெள்ளை மாளிகையில் பில் கிளின்டனை சந்தித்து உரையாடஇருக்கிறார் பிரதமர் பத்வி ஏற்று முதல் முறையாக அங்கு சென்றிருக்கும், மோரி ஜப்பானில் முக்கிய அரசியல், பொருளியல் தலைவர்களைச் சந்திந்திருக்கிறார்.

வரும் ஜூலை மாதம் ஜப்பானில் நடைபெறும் கூட்ட முக்கியஸ்தர்களையும் சந்தித்திருக்கிறார். [து]

## இந்தியக் கடலில் பாகிஸ்தானிய படகு 16 கைதிகள் விசாரணையில்

(புதுடில்லி)

குஜராத்தில் ஜான் நகர் மாவட்டத்தில் ஒப்பார் துறைக்கு அப்பால் அரபுக் கடலில் இந்தியப் பகுதியில் இருந்து 16 பாகிஸ்தானிய நாட்டவர்களை கரையோரப் பகுதிக் காவல்துறையினர் கைது செய்தனர்.

இயந்திரப் படகில் வந்த அவர்களை கரையோரக் காவற்படையின் ரோந்துப் படையினர் கண்டறிந்து கைது செய்துள்ளனர் என்று சொல்லப்படுகிறது.

இவர்கள் விசாரணைக்குட்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. [து]

## டோரியான் தோல் வீசியவருக்கு சிறைவாசமும் அபராதமும் கிடைத்தது

(சிங்கப்பூர்)

மேல்மாடி வீட்டிலிருந்து டோரியான்பழத்தோல் களை கீழ்வீட்டிற்கு வீசியதால் ஒருவருக்குசிங்கப்பூரில் சிறைத் தண்டனை வழங்கப்பட்டிருக்கிறது.

இந்த வழக்கு விசாரணையின் போது குற்றவாளி தான் மேல் மாடி வீட்டில் படுத்திருந்து கொண்டு 4 டோரியான்பழத்தோல்களை வீசியதாகவும் சோம்பல் காரணமாக எழுந்து சென்று உரிய இடத்தில் பழத்தோல்களைப் போடாது படுத்திருந்தபடியே வெளியே வீசியதாகவும் குற்றத்தை ஒப்புக்கொண்டார்.

கீழ்வீட்டுக்காரரால் தொடரப்பட்ட இவ்வழக்கில்தீர்ப்புக் கூறிய நீதிபதி குற்றவாளிக்கு ஒருவார சிறைத்தண்டனையும் அபராதமும் விதித்தார் என்று தெரிவிக்கப்படுகிறது. (து)

## மரநிழலில் படிக்கும் பரிதாபநிலை இடநெருக்கடி காரணமாம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பிரதேச பாடசாலை ஒன்றில் இடநெருக்கடி காரணமாக ஒருசில வகுப்புமாணவர்கள் மரநிழலின்கீழ் இருந்து படிக்கவேண்டிய சூழ்நிலை தோன்றிஉள்ளது. எனக் கூறப்படுகிறது.

இடநெருக்கடியினால் பாடங்கள் கற்பிப்பதில் தடங்கல், தடைகளும் ஏற்படுகின்றது. எனவும் தெரிவிக்கப்படுகிறதுஇதேவேளைமரநிழலின் கீழ்இருந்து கற்கும்மாணவர்கள் வெறும்நிலத்தில் இருப்பதால் உடைகளிலும் விரைவாகஅழுக்குபிடிக்கின்றதுஎன்றும் இதனால் பெற்றோர் மத்தியில் அதிருப்தி ஏற்பட்டுள்ளது. என்றும் தெரிவிக்கப்படுகிறது. (த-சி)

## கடற்படை, ராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் தீவிர முனைப்பு

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சிகிழக்கு மணற்காட்டுப்பகுதியில் புதிய கடற்படைத்தளம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது எனத் தெரியவந்துள்ளது.

இதேவேளை அம்பன் உதவிஅரச அதிபர்பணிமனை, அம்பன் பிரதேசசபை என்பவற்றில் பாரியஇராணுவமுகாம்ஒன்றும் புதிதாக அமைக்கப்பட்டுளது.

வல்விபுரக்கோவிலில் இருந்து நாகர்கோவில்வரை கரையோரக்காவல் அரணும் படையினரால் அமைக்கப்பட்டு வருகிறது. (சி-43)

## இரண்டரை லட்சம்ரூபா பெறுமதியான சிகரட்கடத்தல்முயற்சி முறியடிக்கப்பட்டது

(கொழும்பு)

குவைத்திலிருந்து கடந்த புதன்கிழமை காலை கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் வந்திறங்கிய விமானத்தில் இலங்கைக்கு கடத்திவரப்பட்ட சுமார் இரண்டரை இலட்சம் ரூபா பெறுமதியான சிகரெட்டுகளை சுங்கஇலாகா அதிகாரிகள் பறிமுதல்செய்துள்ளனர்.

தொலைக்காட்சிப்பெட்டிக்குள் மறைத்து வைக்கப்பட்டிருந்த 320 சிகரெட் பொதிகளை அதிகாரிகள் கைப்பற்றினர்.

இவரைக் கடுமையாக எச்சரித்து விடுதலைசெய்த அதிகாரிகள் பொருட்களைப் பறிமுதல்செய்தனர்.

விசாரணையின்போது இந்நபர் நண்பரின் உறவினர் ஒருவரிடம் ஒப்படைக்கவே தொலைக்காட்சிப் பெட்டியைக் கொண்டுவந்ததாகவும் சிகரெட் மறைத்துவைக்கப்பட்டவிடயம் தனக்குத்தெரியாதுஎன்றும் கூறினார். (சி)

## வீதி அபிவிருத்தி அதிகார சபை செயற் பாடுகள் மந்தகதியில்?

(ஈச்சமோட்டை)

தற்போதைய யுத்தசூழ்நிலையால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ். கிளையின் செயற்பாடுகள் மந்தகதியிலேயே இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாண அலுவலக பொறுப்பதிகாரி தற்போது வவுனியாவில் தங்கிஉள்ளதால் தேவையான அறிவுறுத்தலோ, அல்லது வேறுஎந்த விதமான செயற்பாடுகளோ எதுவும் மேற்கொள்ள முடியாமல் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் அபிவிருத்திப்பணிகள் பலவும் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [க-59]

## ஆசிரியர்களுக்கு ஓர் இசைமாலை: இன்று இசைநாடா வெளியீடு

(யாழ்ப்பாணம்)

யா/முத்துத்தம்பி வித்தியாலயம் வழங்கும் ஆசிரியர்களுக்கு ஓர் இசைமாலை இசைநாடா வெளியீட்டு விழா இன்று முற்பகல் 10 மணிக்கு நல்லூர் ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் அதிபர் திரு. த. சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

நல்லூர் ஆதீன முதல்வர் சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள் தெய்வஆசி வழங்குவார்.

யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் அ. சண்முகதாஸ் பிரதம விருந்தினராகவும், திருநெல்வேலி சைவ சிறுவர்இல்ல காப்பாளர் திருமதி ம. சண்முகதாஸ் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். [சி]

## 10 வருடங்களுக்கு மேலாக அசிரத்தை கோப்பாய் நாவலர் வித்தியாலய குறைபாடு குறித்து முறையீடு

(கோப்பாய்)

கடந்தபத்துவருடங்களுக்கு மேலாக முற்றாகத் திருத்தியமைக்கப்படாத நிலையில் கோப்பாய்நாவலர்வித்தியாலயத்தின் மேல்மாடிக் கட்டடம் காணப்படுகின்றது.

கீழ்த்தள வேலைகள் ஏற்கனவே முடிவடைந்துவகுப்புகள் நடைபெறுகின்றபோதும் மேல் மாடியில் சுவர்கள் மாத்திரமே முற்றாகக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

இதுவரை கூரை வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை. கட்டடச் சுவரும் சேதமாகிய நிலையிலேயே காணப்படுகின்றது. இவ்வளவு நாட்களாக அவ்வேலையைப்பூர்த்தி செய்வதற்கான ஆக்க பூர்வமான நடவடிக்கைகள் எதுவும் இதுவரைமேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இம் மேல் மாடி வேலைகளைப் பூர்த்திசெய்து பாடசாலையின் இட நெருக்கடித் தீர்வுக்கு ஆவன செய்துதவுமாறு சம்பந்தப்பட்டவர்களுக்கு பெற்றோர்களும் பாடசாலை அபிவிருத்திச் சங்கமும் நீண்ட நாட்களாக கோரிக்கை விடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (சி-43)

## மின் பாவனையில் துஷ்பிரயோகம் நிகழ்ந்தால் சீரானபயன் கிடைக்காது

### மாவட்ட பொறியியலாளர் தெரிவிப்பு

(புலோலி)

அரசாங்கம் மக்களுக்கு மின்சாரத்தை சேவை அடிப்படையிலேயே வழங்குகின்றது. மின்சார வசதிகளைப் பெற்றுக்கொள்வோர் அதனைத்துஷ்பிரயோகம் செய்யக்கூடாது. பொதுமக்களின் ஒத்துழைப்பினாலேயே மின்சாரசபை பொதுமக்களுக்குச் சிறந்த மின் சேவைகளை வழங்க வழியேற்படும்.

இவ்வாறு இலங்கை மின்சாரசபை யாழ்.மாவட்ட பொறியிலாளர். திரு.எஸ். வல்லிபுரம்கரவெட்டிகலிகைச் சந்தியில் அமைக்கப்பட்ட டிரான்ஸ்போமர் மூலம் விநியோகிக்கப்படவுள்ள 24 மணி நேர மின் விநியோகத்தை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இம் மின் விநியோக ஆரம்ப விழாவிற்கு பருத்தித்துறை துறைமுக உத்தியோகத்தர். திரு.எஸ்.சிவலிங்கம்தலைமை தாங்கினார். கலிகைச்சந்தியில் 400 கே.வி.டிரான்ஸ்போமர் அமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம்யாக்கரு, குடவத்தை, புதுத்தோட்டம், துன்னாலை, வெவிக்கந்தோட்டம், வல்லியானந்தம் பகுதிகளைச்சேர்ந்த 1200வீடுகளில் வசிப்போர் 24 மணிநேர மின்விநியோகத்தைப் பெற்றுள்ளனர்.

தொடர்ந்து உரையாற்றிய மின் பொறியியலாளர். திரு.வல்லிபுரம் குறிப்பிட்டதாவது,

மின் பாவனையாளர்களுக்குச் சிறந்த மின் சேவைகளை வழங்கவே இலங்கை மின்சாரசபை விரும்பி முயற்சிக்கின்றது. ஆனால் இன்றைய நிலை அதற்கு இடம்கொடுப்பதாகவில்லை. 1990 ஆம் ஆண்டளவில் 314 டிரான்ஸ் போமர்களினூடாக மின் விநியோகத்தை மேற்கொண்டு வந்தோம். ஆனால் இன்றைய நிலையில் போதிய மின்சார விநியோகத்தைமேற்கொள்ள முடியாமல் உள்ளது. எனினும் இன்று செயற்படத்தொடங்கியுள்ள டிரான்ஸ் போமர் போன்ற டிரான்ஸ் போமர் மூலமே மின் விநியோகத்தை மேற்கொண்டு வருகிறோம்.

மேலும் பல்வேறு இடங்களில் டிரான்ஸ் போமர்களை அமைத்து மின்விநியோகங்களை விஸ்தரிப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கை மின்சாரசபை மேற்கொண்டு வருகின்றது. மின்சார சபையின் நடவடிக்கைகளுக்குப் பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும். அப்போது தான் மின்விநியோகம் ஒழுங்காகவும் சிறப்பாகவும் இடம்பெற முடியும்.

இவ் விழாவிலேவடமராட்சியின் அத்தியட்சகர் திரு. ரீ.இராசலிங்கம் மின் அத்தியட்சகர் திரு.எஸ். இராசேந்திரம் வடபிராந்தியபோக்குவரத்துச்சபை பருத்தித்துறை டிப்போ முகாமையாளர். திரு எஸ்.கமலநாதன்வடமராட்சி வலய பிரதிக்கல் விப்பணிப்பாளர். திரு.எஸ். அருளானந்தம் கலிகை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி உட்பட பெருந்தொகையான பொதுமக்கள் கலந்துகொண்டனர். திரு.எஸ். ஸ்ரீஸ்கந்தராஜா(அதிபர்) நன்றியுரை நிகழ்த்தினார். (சி-52)

## போசாக்கின்றி குழந்தைகளும் கூட வாடுகின்றன என எடுத்துரைப்பு

(வடமராட்சி-கிழக்கு)

வடமராட்சி-கிழக்கு மாமுனை, செம்பியன்பற்று குடாரப்புப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து அம்பன் குடத்தனை பகுதிகளில் தங்கியுள்ள மக்களிற்கு தொண்டு நிறுவனங்கள்உதவ முன்வர வேண்டும். என வடமராட்சி-கிழக்கு இடம்பெயர்ந்தோர் ஒருங்கிணைப்பு குழுத் தலைவர் இ. ராஜாதெரிவித்துள்ளார்.

உடமைகளை இழந்து நிர்க்கதியாய் உள்ளது மாத்திரம் அன்றி குழந்தைகள் போசாக்கு இன்றி வாடுவதாயும் அவர் மேலும் கூறியுள்ளார். (சி-43)

## பஸ்சேவை

(வடமராட்சி கிழக்கு)

வடமராட்சி கிழக்கு செம்பியன்பற்றில் இருந்து சுண்டிக்குளம் வரை பஸ்சேவை இடம்பெறுவதாகத் தெரிய வந்துள்ளது.

இதேவேளை உடையார் கட்டில் இயங்கும் மருதங்கேணி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் தாளையடியில் ஒரு கூட்டுறவுக் கிளைக்கடையைத் திறந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி-43)

## நூலக நிலை

(வடமராட்சி-கிழக்கு)

வடமராட்சி-கிழக்கு அம்பன் பிரதேச சபை நூலகத்தில் இராணுவமுகாம் அமைக்கப்பட்டதைத் தொடர்ந்து அங்கிருந்த பிரதேச சபை அலுவலக உபகரணங்கள் காகிதாதிகள் என்பவற்றை அங்கிருந்து பாதுகாப்பான இடத்திற்கு இடம் மாற்றவுள்ளதாக பிரதேச சபை நூலக பொறுப்பதிகாரி எஸ் பத்மநாதன் தெரிவித்தார். [சி-43]

### அச்சுவேலி ப.நோ.கூ.சங்க

## கிளைகளில் சீனி, தீப்பெட்டி பற்றறி விலைகள் அதிகரிப்பு; மக்கள் அதிருப்தி

(அச்சுவேலி)

அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினால் அதன் எல்லைக்குட்பட்ட கிளை நிறுவனங்களில் ஒரு கிலோ சீனியின் விலை 2 ரூபாவாலும், ஒரு சோடி பற்றியின் விலை 2 ரூபாவாலும், தீப்பெட்டியொன்றின் விலை 50 சதத்தினாலும் கடந்த 2 ஆம் திகதிமுதல் அதிகரிக்கப்பட்டுள்ளது

இதேவேளை வேறு சில பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களிலும் சில பொருட்களிற்கு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமது கையிருப்பில் உள்ள சில அத்தியாவசியப் பொருட்களுக்கு திடீரென விலையை அதிகரித்திருப்பது மக்கள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது. (க-14)

## கொக்குவில் பகுதியில் இரவுவேளை நிகழ்ந்த' இரு துணிகரத் திருட்டுகள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு வேளை நிகழ்ந்த இரு துணிகரத் திருட்டுகள் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன.

குறிப்பிட்ட தினம் யாழ். இந்துமகளிர் கல்லூரி ஆரம்பப் பாடசாலையில் ஆசிரியையாகக் கடமையாற்றும் திருமதி சாந்தா என்பவரது வீட்டு ஜன்னல் கம்பிகளை வளைத்து உட்புகுந்த திருடர்கள்,

அலுமாரியிலிருந்த பெறுமதிவாய்ந்த தங்கநகைகள், சேலைகள் ஆகியவைற்றைத் திருடிச்சென்றுள்ளனர். வீட்டார் உறக்கத்திலிருந்த வேளை நிகழ்ந்த இத்திருட்டின்போது திருடர்கள் குறிப்பிட்ட சேலைகளில் தரம் பிரித்து விலையுயர்ந்தவற்றை மாத்திரம் திருடிச் சென்றுள்ளனர்.

இவ்விடத்திற்குச் சற்றுத் தொலைவில் பிரம்படி லேனில் சிவப்பிரகாசம் என்னும் ஆசிரியரது வீட்டில் வியாழனிரவு புகுந்த திருடர்கள் ஒருவகை இரசாயனக் கலவையை விசிறி வீட்டாரை மயக்கமடையச் செய்து விட்டு ஆசிரியரது மனைவியணிந்த தங்கச் சங்கிலியைத் திருடியதுடன் குளிர்சாதனப் பெட்டியிலிருந்த குளிர்நீரையும் அருந்தி வாழைப்பழங்களையும் உண்டுள்ளனர்.

அத்துடன் வாழைப்பழத் தோல்களை வரிசையாக அடுக்கிவைத்தும் திருடர்கள் சென்றுள்ளனர். (சி)

## பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் யாழ்ப்பாணத்துள் முடக்கம்

வட பகுதிக்கான பயணிகள் கப்பல் சேவை சீர்குலைவை அடுத்துபேராதனை பல்கலைக்கழத்திலிருந்து யாழ்ப்பாணம்வந்தமாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பல்கலைக்கழக மாணவர்கள் 20 பேரே இவ்வாறு சிக்குண்டிருப்பதாகவும் இவர்கள் தமது கல்வியைத் தொடரமுடியாது இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# வவுனியா கல்வியற் கல்லூரி பகிடிவதை

# கொடுமை; மாணவன், மாணவி இடை நிறுத்தம்

## கடும் நடவடிக்கை நிச்சயமென்கிறார் பீடாதிபதி

(வவுனியா)

வவுனியா தேசியக் கல்வியற் கல்லூரியில் கடந்த புதன் கிழமை நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்படும். பகிடிவதைச் சம்பவம் தொடர்பாக மேற்படி கல்லூரி பீடாதிபதி எஸ். அழகரட்ணம் இருவரைக் கல்லூரியிலிருந்து இடை நிறுத்தம் செய்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணை மேற் கொள்ளப்படும் எனவும் அவர் சொன்னார்.

சிவசுந்தரம்கோமசதிபெரிய தம்பி செந்தில்நாதன் என்ற இருவருமே இடைநிறுத்தப் பட்டவர்களாவர்.

கடந்த புதன்கிழமைகாலை 5 மணியளவில் மாணவர்கள் தங்கியிருந்த விடுதிக்குச் சென்று உடற்பயிற்சிக்கு என மைதானத்திற்கு மாணவர்களை அழைத்து வந்துநிர்வாணமாக்கினராம் பின்னர் மைதானத்தைச் சுற்றி அதே கோலத்தில் ஓடவிடப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பாக வவுனியாவில் உள்ள ஆசிரியர்கள் வியாழக்கிழமை மாலை பீடாதிபதியையும் இரண்டாம் வருட மாணவர்களையும் புதிய மாணவர்களையும் கருத்துப்பரிமாற்றத்தின் பொருட்டு சந்தித்தனர்

எதிர்காலத்தில் ஆசிரியர்களாக வரவேண்டியவர்கள் செய்த இக்கொடுமை குறித்து சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அங்கு வலியுறுத்தப்பட்டது.

இவ்வாறானவர்களின்மத்தியில் கற்பிப்பது வெட்கத்துக் குரியது. எனக்கூறி ஒருவிரிவுரையாளர் இச் சந்திப்பின் போதுகண்ணீர்விட்டாராம்.

பீடாதிபதி இப்பகிடிவதை குறித்து கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார். (த-சி)

# யுத்தத்திற்கு தூபமிட்டோர் பேரினவாதிகள் என்பதே உண்மை

## பு. ஜ. கட்சி செயலர் சொல்கிறார்

''இனப்பிரச்சினையை யுத்தம் என்ற நிலைமைக்கு வளர்த்துவிட்டவர்கள் சிங்கள பேரினவாதிகளே அன்றி ஆயுதமேந்திய தமிழ் இளைஞர்கள் அல்லர் என்பதை இன்றுயாவரும் உணரும் நிலை எழுந்துள்ளது'' என்று கொழும்பில் நடைபெற்ற புதிய ஜனநாயகக் கட்சி ஜனநாயக இடதுசாரி முன்னணி ஐக்கிய சோஷலிஸ்ட் கட்சி என்பனவற்றின் கூட்டு மேதினப் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் புதியஜனநாயகக்கட்சியின் பொதுச் செயலாளர்சி.கா. செந்தில் வேல்கூறினார்.

''யுத்த வெறியர்களுக்கும் யுத்தவாதிகளுக்கும் எதிராக ஆனையிறவில் அடிவிழுந்த புத்தர்பிரமாண்டின் முதல் மேதினத்தில் சிங்கள இளைஞர்களையுத்தப்பீரங்கித் தீனிகளாக்க இனிமேலும் பலிகொடுக்க வேண்டாம் எனக்கோருகிறோம்.

ஆனையிறவு யுத்தகளத்தில் ஜனாதிபதியினதோ யுத்த வெறியர்களினதோ பிள்ளைகள் பலியிடப்படவில்லை வறுமையில் வாழும் தொழிலாளர்களின் பிள்ளைகளே பலியானவர்கள் என்பதை சகலரும் உணரவேண்டும் நீதியான யுத்தம் ஒருபோதும் தோற்றதுகிடையாது'' என்று அவர் மேலிலுசென்னார். (சி)

### யுத்தம் முடிவடைந்தாலும்

# மட்டக்களப்பின் அபிவிருத்திக்கு பல வருடங்கள் செல்லலாம்

## கப்பல் துறை செயலர் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

யுத்தம் முடிவடைந்தாலும் மட்டக்களப்பு பிரதேசம் அபிவிருத்தி அடைய பலவருடங்கள் செல்லலாம்என உல்லாசப்பயண கப்பல் துறை மேலதிக செயலர் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்; யுத்தத்தின் கொடூர விளைவுகளால் அப்பகுதி மக்கள் உளரீதியில் மிகவும் பாதிப்படைந்துள்ளனர்.

இவ்யுத்தத்தின் மூலம் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இளம் விதவைகள் உருவாகியுள்ளார்கள்.

இவர்களின் வாழ்வை மேம்படுத்த பல்வேறு வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப் படவேண்டும். இம்முயற்சிக்கு பல வருடங்கள் செல்லலாம். க-59)

# இல- இனப்பிரச்சினை மத்திய அரசு நடவடிக்கைக்கு பூரண ஆதரவு

## தமிழக முதல்வர் அறிவிப்பு

(புதுடில்லி)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் விடயத்தில் மத்திய அரசுக்கு முழு ஆதரவை தமிழகம் தரும்என தமிழ்மாநில முதல்வர் மு.கருணாநிதி உறுதி அளித்திருக்கின்றார்.

இவ்விடயம் சம்பந்தமாக பேச்சுவார்த்தை நடத்துவதற்கு பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாயின் அழைப்பைஏற்று மாநில முதல்வர் மு.கருணாநிதி புதுடில்லிக்குச் சென்று இருந்தமை தெரிந்ததே.

அதேவேளை பி.ஜே.பிகூட்டணிக் கட்சிகள் இலங்கைக்கு மீண்டும் இந்தியப்படையை அனுப்பக்கூடாது என்று ஏற்கனவேபிரதமரிடம் கூறியுள்ளன.

ஆனால் இலங்கையில் பாதிக்கப்பட்டுள்ள தமிழர்களுக்கு உதவுமானால் மனிதாபிமான அடிப்படையில் உதவிப் பொருட்களை அனுப்பத்தடை ஏதும் இல்லை என்றும் தெளிவுபடுத்தியுள்ளன.

**ஐஸ்வந்சிங்**

இதேவேளையில் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் கொழும்பின் கோரிக்கையின் பேரில் எந்த முடிவும் எடுக்க முன்னர் தமிழ் நாட்டின் கருத்து மனதில் கொள்ளப்படும் என்று மாநிலங்கள் அவையில் கூறியுள்ளார்.

ஆனால் இராணுவத்தலையீடுஎதுவும் இருக்காது என்று கூறியுள்ளதுடன் ஆயுதங்கள வெடிமருந்துப் பொருட்கள் எதுவும் இலங்கைக்கு அனுப்பப்படமாட்டாதுஎன்றும்உறுதியளித்துள்ளார். (செ-சி)

# மின்சார விநியோக தடங்கல் நிவர்த்தி செய்ய தீவிர ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாண மின் விநியோகத்தில் தொடர்ந்து தடங்கல் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் விரைவில் சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் படிப்படியாக மேற்கொள்ளப்படும் எனவும் மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இது தொடர்பாக மேலும் தகவல் கிடைத்திருப்பதாவது காங்கேசன் துறையில் ஏற்கனவே பொருத்தப்பட்டு இயங்கிக் கொண்டிருந்த எட்டு இயந்திரங்களில் ஒன்று எரிந்துள்ளது. இதனால் தற்போது ஏழு இயந்திரங்களே பயன்பாட்டில் உள்ளது. இதேவேளை கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட ஒன்பது இயந்திரங்களில் ஒன்று பழுதடைந்துள்ளதால் எட்டு இயந்திரங்களே பயன் படுத்தும் நிலையில் உள்ளது. இவ் இயந்திரங்கள் பொருத்தும் பணி முடிவடைந்த போதும் மின் வழங்கலுக்கான புவித் தொடுப்பு கருவி மற்றும் ஆழி சிலிண்டர் என்பன எடுத்து வரப்பட்டதால் இத் தடங்கல்ஏற்பட்டுள்ளது இவற்றை நிவர்த்தி செய்யும் பணிகள் முழுமூச்சுடன் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளையில் தற்போதைய யுத்த நிலைமை தொடர்பான போக்குவரத்து சீர் குலைவு என்பன மின்சாரம் வழங்கும் முயற்சியில் மேலும் தடங்கல் நிலை ஏற்படுத்தக் கூடும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-12)

## இராணுவ ஆஸ்பத்திரிக்கான ஐ.தே.க மருத்துவ உபகரணங்கள் ஏற்பு

(கொழும்பு)

ஐக்கியதேசியக்கட்சியினால்கடந்தவாரம்இராணுவ ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்புச் செய்யப்பட்ட மருத்துவ உபகரணங்களை ஏற்றுக்கொள்வதற்கு மறுப்புத்தெரிவித்திருந்த இராணுவம், சென்ற புதன்கிழமை அவற்றைப் பெற்றுக்கொண்டுள்ளதாக அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இரண்டுஇலட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை ஐ.தே.க.எம்.பி அனுராபண்டாரநயக்கா வைத்தியசாலையில் ஒப்படைத்தார். (சி)

## அகதியாக சென்றவர்களில் ஒரு பெண் சந்தேகத்தின் பேரில் கைது

தற்போது இலங்கையில் நிகழும் உக்கிரயுத்தத்தின் எதிரொலியாக 150 க்கும் மேற்பட்ட இலங்கை அகதிகள் மண்டபம் முகாமுக்கு வந்துள்ளனர் என அறிவிக்கப் பட்டுள்ள அதேவேளை இவர்களில் ஒருபெண் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச்சேர்ந்தவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாகத்தகவல் வெளியாகியுள்ளது.

இப்பெண் கியூப்பிரிவுப் பொலிஸாரால் வேலூர் சிறைச்சாலைக்கு அனுப்பப் பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

### சாதனை மனிதரின் 81 வது ஜனனதினம்

(மந்திகை)

வதிரி அபிவிருத்திநிறுவனம் நடாத்தும் சாதனை மனிதர் மூ. சி. சின்னத்தம்பியின் 81 வது ஜனனதினம் கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் இடம் பெற்றது.

நிறுவனத்தின் தலைவர் சி. வரதராஜன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், கரவெட்டி பிரதேச செயலர் எஸ். ஸ்ரீநிவாசன் உட்பட பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டனர். (க-23)

### வீதிகள் திருத்தம்

(அராலி)

அராலிப் பகுதியின் பிரதான வீதியில் இருந்து பிரிந்து செல்லும் ஒழுங்கைகள் திருத்தப்பட்டுள்ளன.

அராலி தெற்கு. அராலி வடக்கு . மற்றும் ஒழுங்கைகளில் மழைகாலங்களில் பாவனைக்கு கடினமான ஒழுங்கைகளுக்கே மண் போட்டு ஒழுங்கைகள்திருத்தப்பட்டுள்ளன.

இதேவேளையில் அராலி தெற்கு காராவயல் குடிநீர் கிணறும் திருத்தப்பட்டு வருகிறது.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்டத்தின் உதவியுடன் இத்திருத்த வேலைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. (க-24)

### விசேட பொதுக் கூட்டம்

(அரியாலை)

மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் விசேட பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3 30 மணிக்கு கல்லூரி வாகீசர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இச்சங்க அங்கத்தவர்களின் தற்போதைய முகவரியை அறியத் தரும்படி கேட்டுக் கொள்ளப் படுகின்றனர் (செ-106)

### சமுகமளிக்க கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

மட்டக்களப்பு, வவுனியா கல்விக் கல்லூரிகளுக்குத் தெரிவாகி போக்குவரத்து வசதி இன்மை காரணமாக அங்கு செல்ல முடியாத மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டமைக்கான ஆவணங்கள் ஆளடையாள அட்டை மற்றும் அவசியமான சான்றிதழ்களுடன்எதிர்வரும்8ஆம் திகதிகாலை9மணிக்கு யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (சு)

### பொருட்கள் இடமாற்றம்

தென்மராட்சியில் தொடரும் யுத்தத்தை அடுத்து நாவற்குழிப்பகுதியில் இயங்கி வந்தஜேர்மன்தொழில் நுட்ப நிறுவன உபகரணங்கள் பல இணுவில் கந்தசாமிகோயில் பகுதிக்கு மாற்றப்பட்டுள்ளன.

பாதுகாப்புக்கருதியே இவ்வாறு மாற்றப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. க-49)

### தமிழ்த்தினப் போட்டிகள்

கரவெட்டிக் கல்விக் கோட்டப் பாடசாலைகளுக்கிடையிலான கோட்டமட்ட தமிழ்த்தின தெரிவுப்போட்டி எதிர் வரும் 19-ஆம் திகதி புதன்கிழமை கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக, கோட்டக் கல்வி அதிகாரி எஸ். அம்பலவாணர் தெரிவித்துள்ளார்.

இக்கோட்ட மட்டத்தில் தெரிவாகும் பாடசாலைகள் வலய மட்டப் போட்டிகளில் பங்குபற்றுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (செ-23)

### சடலம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரிப் பகுதியில் இருந்து இனந்தெரியாத ஆணின் சடலம் ஒன்றை சாவகச்சேரி பொலிசார் நேற்று யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்

சாரத்துடன்சேட் அணிந்த நிலையில் சடலம் காணப்பட்டது. (வ-94-12)

செடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற்றங்கே எடுப்பதூஉம் எல்லாம் மழை

-குறள்

# வலம்புரி

## நமது என்பதறிந்தோம்

நாமிருக்கும் நாட்டினைச் சுட்டவந்த புரட்சிக் கவிஞன் இது நமது என்பதறிந்தோம் எனக் கூறிய பின் ஆயிரம் பிறைகள் கண்டுவிட்டோம். இன்றைக்கு இன்னலின் அளவு இன்னதென்று சொல்ல முடியாத அளவுக்கு மக்கள் அல்லலப்பட்டு ஆற்றாது அழுத கண்ணீர் இந்து மாகடலை சுவர்ப்பாக்கியிருக்கிறது. பிறரது துன்பத்தில் குளிர்காய்கின்ற அரசியல் சித்தாந்தம் இனிமேலும் நாட்டிலே தலை காட்ட விடக் கூடாது.

அர்த்த முள்ள வாழ்விற்கு நாம் எம்மைத் தயாராக்கிக் கொள்ள வேண்டும். முழந்தாளிட்டுக் கொண்டு உயிருடன் இருப்பதைக் காட்டிலும் நின்று கொண்டு இறப்பது மேல் என்பது பாரதியின் சிந்தனை. பாண்டி நாட்டு பண்பும் பரிவும் காணப்படும் வடபுலத்தில்வாழ்வின்மேன்மைக்கு நீதியினை நிறுவுவதற்கு ஒரு கண்ணகி தோன்ற வேண்டுமா? 185 வருடங்களுக்கு முன்னரும் காணப்பட்ட இனவாதமே கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சிக்குக் காரணமானது.

கண்டியின் கடைசி மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் 1815-ம் ஆண்டில் காட்டிக் கொடுப்பின் மூலம் சிறைப்பிடிக்கப்பட்டான். அத்தகைய துரோகத் தனங்கள் இன்றும் தொடர்வதாக இருக்கிறது. எங்கள் வாழ்வு மலர வேண்டுமானால், அர்த்த முள்ள திசையில் திரும்ப வேண்டுமானால் தியாக உணர்வு துளிவிட வேண்டும். துரோகத்தனங்கள் தொலைந்து போக வேண்டும்.

எதையும் தாங்கும் இதயங்களோடு ஓட்டத்தின் கடைசி ரவுண்டில் நிற்கிறோம். துன்பத்தின் பின் மலரப் போவது இன்பமென்று தான் தெய்வப் புலவன் கூறியிருக்கிறான் அந்த ஆழமான கருத்தின் நிழலில் நின்று கொண்டு சற்று ஆறு தலடைவோம் பெறப்போகும் நிம்மதிக்கும் வரவேற்பளிக்க ஆயத்தமாவோம். எண்ணிய அடைய திண்ணிய நெஞ்சமே துணை.

புத்தாயிரமாம் ஆண்டின் புலர்வு மண்ணுக்குப் புதுப் பொலிவை, மலர்ச்சியைத் தந்தாக வேண்டும் எத்தனும் எம் மண்ணில் இறுகத்தடம் பதிப்போம்.

- அன்புடன் ஆசிரியர்

# பயணிகள், சரக்குவிமானங்கள் பல உடன்கொள்வனவுசெய்யதீர்மானம்

(கொழும்பு)

வெளிநாடுகளிலிருந்து உடனடியாக பெருமளவு பயணிகள் விமானங்கள் மற்றும் சரக்கு விமானங்களைப் படையினரின் தேவைகளுக்காகக் கொள்வனவு செய்ய அரசு தீர்மானித்துள்ளது.

வடக்கு - கிழக்குப் படையினரின் தேவைகளுக்காக விமானங்கள் பெருமளவில் தேவைப்படுவதால் இவற்றைக் கொள்வனவு செய்வதற்கு முடிவுசெய்துள்ளது.

அண்மைக்காலங்களில் விமானப்படை விமானங்கள் பல புலிகளின் தாக்குதலுக்கிலக்காகியதால் அழிக்கப்பட்ட அதேநேரம் தற்போது ஐம்பது வீதமான விமானங்களும் ஹெலிகொப்டர்களும் செயலிழந்து தரையில் நிறுத்தப்பட்டுள்ளன.

கடந்த இருவாரங்களில் பல தடவைகள் கூடிய தேசிய பாதுகாப்புச் சபைக் கூட்டத்தில் படையினருக்கு அவசரமாகத் தேவைப்படும் முக்கிய இராணுவத் தளபாடங்கள் உட்பட பெருமளவு விமானங்கள் கொள்வனவு செய்யப்படவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆயுதக் கொள்வனவு தொடர்பாக அண்மையில் கொழும்பிலுள்ள ரஷ்யத் தூதுவருடன் பாதுகாப்பு அமைச்சு உயரதிகாரிகள் விரிவாகப் பேச்சுநடத்தியுள்ளனர்.

ஏற்கனவே ஏழு நாடுகளைச்சேர்ந்த ஆயுத உற்பத்தியாளர்கள் கொழும்புக்கு வந்துள்ளதுடன் அவர்களையும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையிலான குழு சந்தித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## நந்தாவில் அம்மன் ஆலயமருகே போக்குவரத்துக்கு இடையூறு

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயிலுக்குச் சமீபமாக உள்ள வளைவில் மின்சாரக் கம்பங்களைப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் போட்டுள்ளதால் பொது மக்களும் வாகன மோட்டிகளும் பெரிதும் அசௌகரியத்தை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நிலை நீண்ட நாட்களாக நீடித்து வருவதாகவும் இவற்றை உற்பத்தி செய்யும் நிறுவனம் பொது நன்மை கருதி இந்நிலையை மாற்ற உரிய நடவடிக்கையை தாமதமின்றி மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது. (சி)

## ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை

அச்சுவேலியிலுள்ள இடைக்காடு, வளலாய் கதிரிப்பாய், வரணன் பகுதிகளுக்கு ஜெனரேற்றர் மூலம் மின்சாரத்தை வழங்குவதற்கான நடவடிக்கைகளை இலங்கை மின்சார சபை மேற்கொண்டுள்ளது.

இம் மின்விநியோகத்திற்கான ஜெனரேற்றர் பொருத்தும் வேலைகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

வெகுவிரைவில் மின்சாரம் இக்கிராமங்களுக்கு வழங்கப்படுமென இலங்கை மின்சார சபை அதிகாரியொருவர் தெரிவித்தார் (சி-52)

## பெற்றோல் விநியோகம்; அடுத்தவாரம் ஆரம்பமாகலாம் என எதிர்பார்ப்பு

(யாழ்ப்பாணம்)

வாகனங்களுக்கான பெற்றோல் விநியோகம் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பங்கீட்டு அட்டைக்கு விநியோகிக்கப்படவுள்ள பெற்றோலுக்குப் பொதுமக்களிடமிருந்து பின்வரும் தகவல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

வாகன உரிமையாளர் பெயர், விலாசம் வாகன இலக்கம், வாகனரகம் நடப்பு வருட உரிமப்பத்திர இலக்கம், காப்புறுதிப்பத்திர இலக்கம் பிரதேச செயலர்பிரிவு, எரிபொருள் நிரப்பும் நிலையம்.

பங்கீட்டு அட்டையில் மேற்குறிப்பிட்ட தகவல்களை பூரணப்படுத்தி பிரதேசச் செயலகங்களுக்கூடாக பொதுமக்கள் பங்கீட்டு அட்டையை பெறலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

காப்புறுதிப் பத்திரம் இல்லாதவர்கள் அதற்குரிய காரணங்களை முன்வைக்க வேண்டுமெனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி-3)

## புதிய தபால் பெட்டி

(கொழும்புத்துறை)

5ஆம் குறுக்குத் தெருவுக்கு அருகாமையில்புதிதாகதபால் பெட்டி ஒன்று யாழ்.பிரதம தபால் திணைக்களத்தினால் அண்மையில் வைக்கப்பட்டுள்ளது.

இப்புதிய தபால் பெட்டி யாழ் மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் பொதுச் செயலாளர் ''சமுகமணி,,சி. சி.வரதராசா ஜே.பி.யின் பெருமுயற்சியால் இங்கு வைக்கப்பட்டுள்ளது (க)

## வருடாந்த மஹோற்சவம்

கந்தரோடை அருள்மிகு அருளானந்தப் பிள்ளையார் ஆலய வருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக் கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 16 ஆம் திகதி தேர்த்திருவிழா நடைபெறவுள்ளது. (செ-13)

★ ★ ★

வேலணையூர் அருள்மிகு பெரியபுலம் மகா கணபதிப் பிள்ளையார்ஆலயவருடாந்த மஹோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ந்து பத்துதினங்கள் திருவிழா நடைபெற்று எதிர்வரும் 15 ஆம் திகதி தேர்த் திருவிழா நடைபெறவுள்ளது. (செ)

## இன்னிசை வார்ப்புகள்

(அரியாலை)

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி மாணவர் மன்ற வளர்ச்சி நிதிக்காக, யாழ். பல்கலைக்கழக கலைஞர்கள் இணைந்து வழங்கும் மாபெரும் 'இன்னிசை வார்ப்புகள், நிகழ்ச்சி நாளை ஞாயிற்றுக் கிழமை நெல்லியடி மத்திய மகாவித்தியாலய திறந்த வெளி அரங்கிலும்,

எதிர்வரும் 21 ஆம் திகதி கைலாசபதி கலை அரங்கிலும் பி.ப. 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது. (செ-106)

## பயிற்சிப் பட்டறை முதலமர்வு

யாழ். றோட்டறிக் கழகமும் யாழ். இந்துக் கல்லூரி இன்டரக்கழகமும்இணைந்து நடத்தும் 'விடய ஆயத்தமும் வழங்கலும்' என்னும் தலைப்பிலான பயிற்சிப் பட்டறையின் முதல் அமர்வு இன்று சனிக்கிழமையும், நாளை ஞாயிற்றுக்கிழமையும்,காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 4.30 மணி வரை யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (செ-106)

## இயங்குகிறது

(செம்பியன் பற்று)

இடம் பெயர்ந்து அம்பன் அ.மி.த.க பாடசாலையில் இருந்தமக்கள் யாவரும்அங்கு ஏற்பட்ட,பதற்றநிலைமைகாரணமாக மீண்டும் இடம் பெயர்ந்துகுடத்தனை மணற்காடு,பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களில் வசித்து வருகின்றனர்.

இதனால் அப்பாடசாலை இயங்குவதாகவும் கணிசமான மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளிப்பதாகவும் தெரிவிக்கப் படுகின்றது (42-சி)

## ஐ.சி.ஆர்.சியின் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

கீழே பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை செஞ்சிலுவைச்சர்வதேசக் குழுவுடன் தொடர்பு கொள்ளுமாறு கோரப்படுகின்றது.

நீலன் கணேசன் மாசேரி வரணி, மதியாபரணம் மே/பா.ச யதுரந்து தவசிக்குளம் மிருசுவில், க.வள்ளிப்பிள்ளைமே/பா.சின்னத்துரை நாகம்மா வைத்தியசாலை ஒழுங்கைபெரியபளை,பளை. ச சண்முகம் 4ஐயனார் கோவில் வீதி நாவற்குழி. (சி)

அடங்காப்பற்று நாடக விமர்சனம்

# மண்வாசனை மகான்மியத்தை சீரியவகையில் வண்ணக் கோலமாக்கும் அற்புத லாவகம்

வன்னி மண்ணின் இறுதி மன்னனின் 'அடங்காப்பற்று'- என்னும் ஆட்ட நாட்டுக்கூத்து நாடகமாக கைலாசபதி கலையரங்கில் கடந்த 12. 3. 2000 இல் மேடையேற்றப்பட்டது. வன்னி மண்ணின் முதுசொத்தாக விளங்கும் கோவலன் கண்ணகி நாட்டுக்கூத்து மரபு முறை பெரிதும் பிசகாதவாறு புதிய மெருகுடன் தயாரிக்கப்பட்டது போற்றுதற்குரியது. வன்னிப் பகுதியின் முள்ளியவளைக் கிராமத்தில் ஆண்டாண்டு காலமாக மேடையேற்றப்பட்டு வரும் கோவலன்- கண்ணகி கதையை அடியொற்றி இந் நாடகம் ஆடப்பெற்றது.

இது பல வருடங்களுக்கு முன்னர் 'முல்லை மணியின்' நெறியாள்கையில் ஆடப்பெற்ற பண்டார வன்னியன் நாட்டுக்கூத்தின் தாக்க வெளிப்பாடுகளையும் உள்ளடக்கி உள்ளது. நாடகத்தின் இறுதி முடிவு சடுதியானதொரு ஏமாற்றத்தைத் தந்தமைக்கான காரணம். பண்டார வன்னியன் வெள்ளையரால் பிடிக்கப்பட்டு நிலம் நடுங்கக் கர்ச்சித்து பேசிய வசனங்களை ஒட்டறுத்து இம் மண் அடங்காப்பற்று என்பதை நிலை நிறுத்தி விட்டார்கள், கண்டிய மன்னனின் படை உதவி பெற்றமை. என்னும் வரலாற்றுத் தொடர் வசனம் நம்மை நெடுந்தூரம் சிந்திக்க வைத்தது, சந்தர்ப்பத்தில் வரலாற்று விரிவுகள் இன்றித் தவிக்கும் கண்டி மன்னன் தொடர்பு நிகழ்வுகள் வருங் காலங்களில் தனி நாடகமாக நடிக்கப்படின் பாராட்டுப்பெறும் என்பதுநிச்சயமே.

கட்டியகாரனின் ஆட்ட முறைமை, வசன வீச்சுக்கள், கையசைப்பு முறைகள் பாராட்டத்தக்கன. காத்தவராயன் இசை மரபின் அவசியம் தேவைக்குத் தக்கபடி கையாண்டமை தயாரிப்பாளரின் கலையார்வத்தைக் காட்டியது, வன்னிச்சியரின் நெறி பிறழாத கொள்கைகளும், போர்க்களப் பிரவேசமும் பாராட்டுப் பெறுகின்றன. பொதுவாக நல்லதொரு போர்க்களக் காட்சிதனை கோடிட்டுக் காட்டியது, போற்றத் தக்கது. பண்டார வன்னியனின் வீரம்செறிந்த வசனங்களும், வீராவேசமாக ஆடும் ஆட்டங்களும் சிலப்பதிகாரப் பாண்டிய மன்னனை நினைவு படுத்துகின்றன. அங்கே வஞ்சிப் பத்தனிடம் கண்ட வஞ்சக எண்ணங்களை இங்கே முதலியாரின் முகத்திரையில் கண்டோம்.

மண்வாசனை மிக்கதொரு நாடகம் என்பதற்கு நல்லதோர் எடுத்துக் காட்டு. கலைக்குப் பெயர் பெற்ற வன்னிப் பிரதேசத்தின் பண்பாட்டு வடிவங்களும் நாடகத்தில் ஆங்காங்கே வருகின்றன, மன்னனின் புகழை படமிட்டுக் காட்டுவதை விட மக்களின் புகழை வெளிக்காட்டி வைக்க வேண்டுமென்றதொரு தவிப்புத் தெரிகிறது: அடங்காப்பற்று என்றும் அடங்காது என்பது நிரூபணமாகியது. புதியதொரு பாணியில் ஏற்றவாறு அமைந்த பின்னணி இசை பாடியோர் பாராட்டுப் பெறுகின்றனர்.

மு. சிவபாலராசா

நல்லூர்

★ ப. நோ. கூ. சங்கங்கள் ஊடாக

# அத்தியாவசிய உணவுப் பொருட்களை வழங்க ஒத்துழைக்குமாறு அரச அதிபர் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டு மக்களின் உணவு பொருள் தேவையை தட்டுப்பாடின்றி பூர்த்தி செய்ய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு செயலகம், அரிசி, மா, சீனி, பருப்பு போன்ற அத்தியாவசிய உணவுப்பொருட்களை தட்டுப்பாடின்றி வழங்கவுள்ளதாக யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இதேவேளை செயலகத்தினால் வழங்கப்படும் அத்தியாவசிய உணப்பொருட்களைத் தவிர ஏனைய உணவுப் பொருட்களை யாழ். மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்மூலம்அவர்களுக்கென வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள கப்பலில் உணவுப் பொருட்களை எடுத்துவர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் நிதி உதவி செய்ய வேண்டும் என்று இக்கலந்துரையாடலின் போது அரச அதிபர் கவனத்தில் வர்த்தகர்களையும் பொது முகாமையாளர்களையும் கேட்டுக்கொண்டார்.

யாழ். குடாநாட்டில் அத்தியாவசிய உணவுப்பொருள விநியோகத்தில் எந்தவொரு தடங்கலும், பொருட்களுக்குத் தட்டுப்பாடும் ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யும் வகையில் நேற்று யாழ். செயலகத்தில் அரச அதிபர் க. சண்முகநாதன் தலைமையில் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில் யாழ். மாவட்டத்தில் உள்ள 24 பலநோக்குக்கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள பொது முகாமையாளர்கள் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ. கு. சண்முகநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (வ)

## ○ 160 நாளாக தொடரும் மட்டு இசை நடனக்கல்லூரி மாணவரின் பகிஷ்கரிப்புப் போராட்டம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு விபுலானந்த இசை நடனக் கல்லூரி மாணவர்கள் நேற்று நூற்று அறுபதாவது நாளாக தமது விரிவுரைகள பகிஷ்கரித்து வருகின்றதாக தெரிவிக்கப்படுகிறது.

தமது கல்லூரியை கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்குமாறு கோரியே இப்பகிஷ்சரிப்புப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

கிழக்குப் பல்கலைக்கழகத்துடன் இணைப்பதற்கான தமது போரட்டத்தை இவ்வளவு நாட்கள் தொடர்ந்து நடைபெற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் இதுவரை கவனிக்காமல் இருப்பது கவலை தருவதாகவும் மாணவர் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (வ-ச)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறி இன்று ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப்படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறியின் ஆரம்ப நிகழ்வு இன்று 9மணியளவில் புவியியல் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

புறநிலைப்படிப்பலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா. சிவசந்திரன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக கலாநிதி சபாஜெயராசாவும் கலந்து கொள்கின்றனர்.

மேற்படி பயிற்சி நெறி 2 மாதங்களுக்கு நடைபெறும் என்றும் பயிற்சியில் ஏறத்தாள 100பேர் கலந்துகொள்கின்றார்கள் என்றும் பேராசிரியர் சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ச-7)

## மோட்டார் சைக்கிள் வாகனங்களின் சாரதி அனுமதிப்பத்திரம் தீவிரசோதனை

யாழ்ப்பாணம் மற்றும் இணுவில் ஆகிய பகுதிகளில் மோட்டார் சைக்கிள் மற்றும் வாகனங்களின் சாரதி அனுதிப்பத்திரம் படையினரால் சோதனையிடப்படுகிறத.

ஒட்டோ போன்ற வசனங்களில் தேவைக்கு அதிகமாக பயணம் செய்வோர் மீதும் தீவிர கவனம் செலுத்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. (க-49)

## ப. நோ. கூ. சங்க மூலம் பங்கீட்டு அட்டைக்கு 2 லீற்றர் மண்ணெண்ணெய் வழங்க ஏற்பாடு

[யாழ்ப்பாணம்]

தற்போது யாழ். குடாநாட்டுல் மண்ணெண்ணைச்கு ஏற்பட்டுள்ளதட்டுப்பாட்டைபோக்க பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பங்கீட்டு அட்டைக்கு குடும்பமொன்றுக்கு 2லீற்றர் மண்ணெண்ணை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கூடிய விலையில் மண்ணெண்ணையை விற்பனை செய்யும் வியாபாரிகளை கட்டுப்படுத்து வகையில் இராணுவத்தினர் நடடிக்கை எடுத்துள்ளனர். (வ)

## கிளாலி மோதல்

### பாதுகாப்பு அமைச்சு அறிக்கை

[கொழும்பு]

கிளாலிப்பகுதியில் ஏற்பட்டுள்ள [illegible] புலி[illegible] பட்டிருப்பதாகவும், அ[illegible] தெற்கு நோக்கிச் சென்று கொண்டிருப்பதாகவும் பாதுகாப்பு அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மோதல்களின் போது இரு தரப்பினரும் கடுமையான பீரங்கி, மோட்டார் சண்டையில்ஈடுபட்டதாகவும் இதில் இரண்டு படையினர் கொல்லப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிக்கை தெரிவித்துள்ளது.

கிளாலிப் பகுதியில் புலிகளும் படையினரும் தத்தம் பகுதிகளைப் பலப்படுத்திவருவதால் சிறிய அளவிலான மோதல்களே இடம் பெற்று வருகின்றது. [வ]

## செய்தி தணிக்கை பத். ஆசிரியர்கள் கண்டனம்

(கொழும்பு)

இலங்கையில் பொதுப்பாதுகாப்புச் சட்டத்தின் மூலம் செய்தித் தணிக்கையை ஏற்படுத்தியிருப்பதை இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் கண்டித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடு நாட்டு மக்களின் கருத்துத் சுதந்திரத்தை கட்டுப்படுத்துவதாக தெரிவித்துள்ளதுடன் இறுக்கமான இநத செய்தித் தணிக்கையை நீக்காதுவிட்டால் நீதிமன்றம்வரைசெல்ல வேண்டி ஏற்படாலம் என்றும் பத்திகை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

## வீதி விபத்து கார் சேதம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார்கார் ஒன்றும் லொறியொன்றும் மோதியதில் காரின் முன்பகுதி சேதத்திற்குள்ளானது.

இவ்விபத்துச் சம்பவம் நேற்று பிற்பகல் 1. 30 மணியளவில் நாவலர் வீதியும் கஸ்தூரியார் வீதியும் சந்திக்கும் சந்தியில் இடம்பெற்றது.

## துப்பாக்கிச் சூட்டில் இளைஞன் காயம்

மீசாலை மேற்கில் இனந்தெரியாதோரின் துப்பாக்கிச் சூட்டிற்கிலக்காகி சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் சிவகரன் [வயது 20) என்ற இளைஞன் காலில் காயமடைந்து சாவகச்சேரி மாவட்ட வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அம்புலன்ஸ் மூலமாக போதனா வைத்திய சாலைக்கு அனுப்பப்பட்டார்

### மத்திய...

அரசின் சமீபத்திய வேண்டுகோள்களும் நேற்று புதுடில்லியில் இந்தியப் பிரதமர் வாஜ்பாயிக்கும் தமிழக முதல்வர் மு. கருணாநிதிக்கும் இடையிலான சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டது.

உள்துறை அமைச்சர் எல். கே. அத்வானி, வெளியுறவு அமைச்சர் ஜஸ்வந்சிங் வர்த்தக அமைச்சர் முரசொலி மாறன் இச் சந்திப்பின்போது கலந்துகொண்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேசிய ஜனநாயக் கூட்டணியின் ஒரு உறுப்புக் கட்சியாக இருப்பதால் இலங்கை விடயத்தைச் சமாளிப்பதில் அரசுக்கு உதவவே தி. மு. க விரும்புவதாக அமைச்சர் முரசொலிமாறன் தெரிவித்தார்.

இலங்கையில் இருந்து இதுவரை மனிதாபிமானவேண்டுகோள் எதுவும் வரவில்லை என்று மாறன் தெரிவித்தார். (வ)

### புதிய..

பிரஜா உரிமை, பிராந்திய முதலமைச்சர்கள் நியமனம், பிராந்திய அமைச்சர் நியமனம், செய்தித்துறை ஆகியவற்றிலேயே இருதரப்பினருக்குமிடையே இணக்கம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (வ-ச)

### பயணச் சீட்டு!.

11மணிக்கும் பின்னர் யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றும் நாளையும் விடுமுறை தினமாக இருப்பதால் பணம் மீளளிக்கப்படமாட்டாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [வ]

### அம்பன்...

அமெரிக்கன் மிஷன் பாடசாலை நேற்று முதல் இயங்கவில்லை.

பாடசாலை இயங்காமை தொடர்பாக அதிபர் எஸ். சிறீஸ்கந்தராசா வடமராட்சி கல்விவலயக் கல்விப்பணிப்பாளர் எஸ். சிவராசாவுக்கு கடிதம் மூலம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்
காலை 10-30 பி.ப. 2-30
விஜயகாந் தேவயானி
ரகுவரன் வடிவேல்
நடித்த
வல்லரசு
CD பிரதி வெளியீடு

### ஐக்கிய...

பதினொருமணியளவில் ஆரம்பமான இவ்வார்ப்பாட்டம் நண்பகலுக்குபின்னர் முடிவுற்றது

இந்நிகழ்வின் இறுதியில் ஐ. தே. கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களான அனுரா பண்டாரநாயக்கா, கருனாசேன கொடித்துவக்கு ஆகியோர் உரையாற்றியதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (வ-ச)

### இஸ்ரேலுடன்...

அடுத்து பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா உடனடியாக கொழும்பு திரும்பியதுடன் அஸ்ரப் தலைமையில் இது தொடர்பாக கட்சியின் விசேட கூட்டம் ஒன்றும் நேற்று இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அரசின் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சி என்பது குறிப்பிடத்தக்கது. [வ-ப]

### கோண்டாவில்...

விகாரமாகக்காணப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸாருக்கு தகவல்வழங்கப்பட்டதைஅடுத்து யாழ்.மாவட்ட நீதிபதி இ.த. விக்கினராசாவின் பணிப்புரையின் பிரகாரம் யாழ். மாவட்ட பதில் நீதிபதி த. திருநாவுக்கரசு ஸ்தலத்துக்கு விரைந்து விசாரணைகளை மேற்கொண்டார்.

இவ்விசாரணைகளின் போது சடலத்தை எவரும் அடையாளம் காட்ட முன்வராது போக குமரசாமி பாஸ்கரன் (வயது 48) சாட்சியமளிக்கையில் தான் மேசன் வேலைக்கு போனதாகவும் போகும் வழிதல் இருந்த சாக்கு மூட்டையில் இருந்து துர்நாற்றம் வீசியதாகவும் அதனைத் தொடர்ந்து தான் பொலிசுக்கு தகவல் கொடுத்ததாகவும் தெரிவித்தார்.

சடலத்தைப்பார்வையிட்ட பதில் நீதிபதி த. திருநாவுக்கரசு அப்பகுதி கிராமசேவையாளர் சி பன்னீர்ச்செல்வத்தின் உதவியுடன் கோப்பாய் பெலிஸார் மூலம் சடலம் யாழ். போதனாவைத்திய சாலையில் நேற்றுப் பிற்பகல் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தில் இருந்தஇரண்டு தோடுகளையும் கோப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்த பின்னர் யாழ். மாவட்ட வைத்திய அதிகாரி சிறிராசேஸ்வரனை இன்றுபிரேத பரிசோனை செய்யுமாறு கேட்டுக்கொண்டதுடன் இம்மர்மக் கொலைசம்மந்தமான தகவல்கள் தெரிந்தவர்கள் பொலிசாருக்கோ அல்லது என்னிடமோ தெரிவிக்குமாறு பதில் நீதிபதி த. திருநாவுக்கரசு வேண்டுகோள் விடுத்துள்ளார். [த]

### யாழ்.குடா...

இலங்கை எடுத்துவரும் நடவடிக்கைகளை உன்னிப்பாகத் தொடர்ந்து ரஷ்யா கவனித்து வருவதாகவும் அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-ச)

### கருணாநிதியின்...

நிலை கொண்டுள்ள 28 ஆயிரம் படைகளையும் திருப்பி அழைக்க வேண்டிய நிலை ஏற்படமாட்டாதுஎன்றுஇலங்கை அரசு தெரிவித்துள்ளது.

### நட்பு....

ரேலிடமும் உதவிகளைக்கோரியுள்ளார்.

ஜனாதிபதியின் கோரிக்கைக்கு செவி சாய்த்திருக்கும் மேற்படி நாடுகள் மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்யப்போவதாகத் தெரிவித்துள்ளது.

எந்தவொரு நாடும் தமது இராணுவத்தை நேரடியாக ஈடுபடுத்தப்போவதில்லைஎன திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளன. இதேவேளைபாகிஸ்தானும் இஸ்ரேலும் ஆயுத உதவிகளைவழங்க முன்வரலாம் என்று அரசியல் ஆய்வாளர்கள் கருத்துவெளியிட்டுள்ளனர்.

இதே வேளை எந்தவொரு வெளிநாட்டினது தலையீடும் இனப்பிரச்சினைக்கும், மோதல்களுக்கும் விரைவில் மனிதாபிமான அடிப்படையில் தீர்வு ஏற்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (வ)

சிவாஜி ரசிகர்களின் வேண்டுகோளுக்கு அமைய
ஒஸ்கார் விருதுக்காக அனுப்பப்பட்ட
சிவாஜியின் முதல் தமிழ் திரைப்படம் உட்பட 100 நாள் வெற்றிப்படங்கள் ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும்
ஸ்ரீ செல்வாவில்
காண்பிக்கப்படவுள்ளது.
299

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000ஆம் ஆண்டு மேமாதம் 06-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.